VISIT…

கொஞ்சம் நிலவு
கொஞ்சம் நெருப்பு

ரமணிசந்திரன்



நாவல்கள், கதைகள் படிப்பதன் மூலம் படிக்கும் வாசகர்களுக்கு நல்ல செய்திகள் கிடைக்க வேண்டும். அவை வாழ்க்கை நலத்திற்குப் பயன்பட வேண்டும். மனதில் நின்று நிலைக்கக் கூடிய, நல்ல மாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய பயனுள்ள விஷயங்கள் நிறைந்திருக்க வேண்டும். அவைதான் சிறந்த நாவல்கள் என மதிக்கப்படும்.

இந்த நாவல் வாசகர்களின் கவலையை மேலும் அதிகப்படுத்தி மன நிறைவு தரும் என்பதில் ஐயமில்லை. ஆவலுடன் எதிர்பார்க்கும் வாசகர்களுக்கு இது ஒரு நல்ல விருந்து.

— அருணோதயம் அருணன்

கொஞ்சம் நிலவு கொஞ்சம் நெருப்பு

1

"நீங்கள் என்னதான் சொல்லுங்கள் அப்பா, சீதையை ராமர் தீக்குளிக்கச் செய்தது நிச்சயமாய் ரொம்பவும் அநியாயம்தான். பிரிந்திருந்தால் பெண் கெட்டுப் போய் விடுவாளா? அப்படிப் பார்த்தால் ஆண்கள்தான் அந்த விஷயத்தில் ரொம்பவும் மோசம். ஆனா நரைமீசைக்காரன் கூடப் பஸ்ஸில் பெண்ணைக் கண்டால் உரசத்தான் வருகிறான். நியாயமாக என்றால் சீதை நான் ராமரைத் தீக்குளிக்கச் செய்திருக்க வேண்டும். அங்குமிங்கும் அலைந்து திரிந்து வந்தவர் அவர்தானே? அவரை விட்டுவிட்டு அத்தனை ராட்சதர்கள் மத்தியில் சிறையிருந்த அப்பாவி சீதைக்குப் போய் அக்னிப் பரீட்சை வைத்தது எப்படி நியாயமாகும்?

"நான் மட்டும் சீதையாக இருந்திருந்தால் குறைந்த பட்சம் என்னோடு நீயும் தீக்குளித்து உன் ஏக பத்தினித் தனத்தை நிரூபித்துக் காட்டு என்றிருப் பேன். அது தானேப்பா சரி?"

ஏதோ பேச முயன்ற மனைவியைப் பார்வை யால் தடுத்து, "நீ என்ன சொன்னாலும் நான் சதவீத மாய் அதை நான் அப்படியே ஒத்துக் கொள்கிறேன்" என்றார் சிவருரு.

"போங்கள் அப்பா. எனக்காக ஒன்றும் சொல்ல வேண்டாம். நீங்கள் நன்றாக யோசித்து நான் சொல் வது சரியா தப்பா என்று அபிப்ராயம் சொல்லுங்கள். அம்மாவானால், ஒரு அவதாரத்தின் கதையை நான் பார்க்கிறவிதமே தப்பு என்கிறார்கள். அவதாரம் என் றால் அதைப் பார்த்து மற்றவர்கள் பின்பற்றும் விதமாக இருக்க வேண்டாமா? இப்படி மனைவியின் மேல் சந்தேகப்பட்டுக் கொடுமை செய்யலாமா படில்வது?.... என்னப்பா, நான் பேசிக் கொண்டே இருக்கிறேன். நீங்கள் சும்மா உட்கார்ந்திருந்தால் எப்படி?"

"என்னடாம்மா உன்ன களைப்பு தொண்டருக் கும் உண்டாமே! ஞாயிற்றுக்கிழமையும் அதுமாமா நன்றாகச் சாப்பிட்டு விட்டுச் சும்மா உட்காராமல் வேறே என்னதான் செய்வதாம்?"

"வேறே ஒன்றும் செய்யவேண்டாம். சும்...ம்மா அப்படி உட்கார்ந்த படியே எனக்கு ஒரு பதிலைச் சொல்லுங்கள் போதும்."

மகள் விடப் போவதில்லை என்று கண்டதும், சற்றே யோசித்துவிட்டு, சிவருரு தொண்டையைக் கனைத்துக் கொண்டார். "பாப்பா, என் அபிப்ராயம் என்னவென்றால்... அதாவது..."

தந்தை முடிக்கும் முன் முழுவே உணர்ந்திவிட்டாற் போல் சொதாமினி பாய்ந்தாள். "என்னப்பா நீங்கள்? ராமர் செய்தது சரி என்றா சொல்லப் போகிறீர்கள்?

காலம் காலமாய் வருகிற ஆண் புத்தியை நீங்களும் காட்டி விடாதீர்கள்..."

"அட அப்பா பேசி முடிக்கத்தான் கொஞ்சம் இடம் கொடேன். இப்படி என்ன பொறுமை இன்னமா, ஒரு பொண்ணுக்கு?" சாதா அதட்டலும் அதற்குப் பணிந்தவள் போலக் கையால் வாயை மூடிக்கொண் டாள் சொதாமினி.

மகளின் பாவனையில் முறுவலித்துவிட்டு, சிவ ருரு சொன்னார். "ஒரு கணவனாக இருந்து சீதையைத் தீக்குளித்துத் தூய்மை நிலைகாட்டச் சொன்னார் என் றால் ராமர் செய்தது தப்புதான். ஆனால் அவர் ராஜா ராமனாக அல்லவா சொன்னார்! அந்த வகையில்..."

"ராஜாராமன் என்றால் மட்டும் உற்றார் உறவின ரைப் பிரிந்து, உற்ற கணவனைப் பிரிந்து, முழுக்க முழுக்க அன்னியர்கள் அதிலும் அரக்கர்கள் மத்தியில் சிறைப்பட்டுக் கிடந்த ஒரு பெண்ணைத் தீக்குளித்து உன் தூய்மையை நிரூபி என்பது எந்த வகையில் நியாயமாகுமாம்? எப்படியும் ராமகதையில் அந்த இடம் மகா மோசமான தப்பு அப்பா. மறைந்திருந்து வாலியைக் கொன்றதை விட மிகமிகப் பெரிய அநியா யம்!"

"ஊகும். இப்போதும் நீ நோக்குகிற விதம் சரியில்லை. சீதை யாரோ ஒரு சாதாரணப் பெண்ணாக இருந்திருந்தால் ராமர் இந்த அக்கினிப் பரீட்சை வைத்திருக்க மாட்டார். சீதை அவருடைய மனைவி யாக - அயோத்தியின் வருங்கால அரசியாக இருந்த தால்தான் அவளுக்கு அந்த மாதிரி ஒரு கொடுமை யான பரீட்சையை அவர் வைக்கும்படி ஆயிற்று."

தந்தையின் பதிலை அசை போட்டபடி, "அதா வது... ராமர் சொன்னது வருங்காலத்தில் அயோத்தி யின் குடிமக்கள் சீதையை இளப்பமாக எண்ணக்கூ

டாது என்பதற்காக மட்டும் தான் என்கிறீர்கள். அதுதா னேப்பா?" என்றாள் சௌதாமினி.

"சீசருடைய மனைவி சந்தேகத்துக்கு அப்பாற் பட்டவளாக இருக்க வேண்டும் என்று அவர் சொன்ன தாக நீ படித்ததில்லையா, சதுக்குட்டி? சீசருக்கு நம் ராமர் மட்டமாம்மா?"

"மட்டம் என்று சொன்னேனாப்பா? யாராயிருந் தாலும் மனிதருக்கு மனிதர் நம்பிக்கை முக்கியம் இல்லையா? கணவன் மனைவி, பெற்றோர் மக்கள், காதலன் காதலி, நட்பினர் எல்லா வகை உறவுகளிலும் நம்பிக்கை என்கிற அஸ்திவாரம் இல்லாவிட்டால் அந்த உறவுக்கு அர்த்தம் ஏதுப்பா? அவநம்பிக்கை வந்துவிட்டால் அங்கே உறவு அறுந்து விடுகிறது. இல்லையாப்பா?"

"அறுந்து கிறுந்து என்று ஏம்மா பெரிய வார்த்தை சொல்கிறாய்? ஒரு கறை, ஒரு புள்ளியிலிருந்து வருகிறது என்று வேண்டுமானால் சொல்லலாம். ஆனால் ஒன்று. உன்னைப் பொறுத்தவரையில் வாழ் நாள் முழுவதுக்கும் உனக்கு அந்த மாதிரிப் பிரச்சி னைக்கே இடம் கிடையாது. ஒரு நாள் இரவு முழுவ தும் நீ வெளியே தங்க நேர்ந்து மறுநாள் வந்து நின்று நீ என்ன காரணம் சொன்னாலும் அதை நான் அப்ப டியே நம்புவேன் போதுமா? அல்..."

"என்ன உளறல் இது? இரவு முழுவதும் ஒரு கன்னிப் பெண் வீட்டார் அறியாமல் வெளியே தனியே தங்குவதா? என்னதான் பேசுவது என்று இல்லையா?" என்று கணவரின் பேச்சில் கோபமாகக் குறுக்கிட்டாள் சாரதா.

தாயிடம் திரும்பி, "அப்படியானால் நீங்கள் என்னை நம்பமாட்டீர்களா, அம்மா?" என்று கேட் டாள் சௌதாமினி.

"பெற்று வளர்த்தவள் நான். நான் நம்பாமல் இருக்க முடியுமா? ஆனால் நான் மட்டுமா உலகம்? மற்றவர்களைப் பற்றி நமக்கு என்னவென்று தூக்கி எறிந்துவிட முடியுமா? இப்போது திருமணம் வேறு நிச்சயமாகி இருக்கிறது. மாப்பிள்ளை வீட்டார் நம்பு சொல்லும்படி ஆகி விடக்கூடாது என்று எத்தனை பேருக்குப் பயந்தாக வேண்டும்? முக்கியமாக மாப் பிள்ளை மனதில் ஒரு துரும்பு கூட உறுத்தாதபடி பார்த்துக் கொள்ள வேண்டாமா? இரத்த சம்பந்தம் இல்லாத உறவு. இந்தத் துரும்பு நாளைக்குத் தூணாக வளர்ந்தால் உன் எதிர்காலம் என்ன ஆகும்?"

"அந்தக் கவலை மட்டும் உனக்கு அடியோடு வேண்டாம்." என்று உற்சாகத்துடன் உரைத்தார் சிவ குரு. "மாப்பிள்ளைக்கு நம் சது ஒழுக்கத்தின் மது அவதாரம். நேர்மையின் மறு உரு. பத்து கூடத் தடியர்கள் நடுவில் பத்து நாள் தனியாக இருக்க நேர்ந்தாலும் கற்பு கெடாமல் திரும்பி வருவாள் உங்கள் மகள் என்றார். இப்...ப்படி ஒரு பெண்ணை எப்.....படித்தான் வளர்த்தீர்களோ என்கிறாராகும்." என்று பெருமையடித்தார் பெற்றவர்.

வருங்காலக் கணவனின் பேச்சு வந்ததும் கன் னங்களில் சிவப்பேற உதட்டைக் கடித்துக் கொண்டு மவுனமானாள் மகள்.

அதற்கு மேல் வாத விவாதங்களை மூட்டை கட்டிப் போட்டுவிட்டு மகள் விலகிச் செல்லவும் சிவகுருவுக்குச் சிரிப்பு வந்தது.

"என்னதான் பட்டாசாய் படபடத்தாலும் மாப் பிள்ளை பேச்சை எடுத்ததும் நீர் தெளித்தாற் போல அப்படியே அடங்கிவிட்டாள் பார். பெண்கள் என் றாலே இந்த வெட்கம் உடன் பிறந்துவிடும் போலும்" என்றார் முகத்தில் முறுவலுடன்.

ஆனால் அவருடைய மனைவியின் முகம் அப்படி மலருவதாக இல்லை. ''அவள்தான் கண்டபடி பேசுகிறாள் என்றால், அவளுக்கு மேலாக நீங்கள் வேறு உளறுகிறீர்களே. இரவெல்லாம் வெளித்தங்குவதாம். வேண்டு மென்றே தங்கிவிட்டு, நம்புகிறீர்களா இல்லையா என்று கேட்டால் என்ன செய்வீர்கள். இந்த மாதிரி அதிகப்படி பேச்சுகளை எப்போது தான் நிறுத்துவீர்களோ தெரியவில்லையே!'' என்று எரிச்சல் பட்டபடி எழுந்து சென்றாள் அவள்.

தன் அறைக்குள் சென்ற சௌதாமினியும் தந்தையின் புத்திசாலித் தனத்தைப் பெரிதாக நினைத்து விடவில்லை. இந்த அப்பாவி அப்பாவுக்கு ஒன்றுமே தெரியாது என்றுதான் எண்ணிக் கொண்டிருந்தாள்.

அதற்குக் காரணமும் இருந்தது.

ஏனெனில் அதே வார்த்தைகளை ரவீந்திரன் அவளிடமும் சொல்லத்தான் செய்தான். சொன்ன தொனிதான் வேறு.

திருமணம் நிச்சயமாகி விட்டது. இரு வீட்டுப் பெரியவர்களும் வெற்றிலை பாக்கு மாற்றிக் கொண்டு விட்டார்கள். இதற்கு மேல் இங்கே, அங்கே, பார்க், பீச், சினிமா என்று சேர்ந்து சென்றால் என்ன ஆகிவிடும்? அவ்வப்போது அவள் கொஞ்சம் விட்டுக் கொடுத்தால் என்ன கெட்டுப் போய்விடும்...? அப்படியே கெட்டுப் போய் விட்டாலும், கட்டப் போகிற அவனே கேட்கும் போது, கட்டுப் பெட்டி போலத் தடை போடுகிறாளே என்று வந்த ஆத்திரத்தில் சொன்ன வார்த்தைகள் அவை!

அந்த வார்த்தைகளில் மறைந்து நின்ற குத்தலும் கோபமும் புரியாமல் அதைச் சொல் அளவிலேயே ஏற்றுப் பெருமையாகத் திருப்பி வேறு சொல்கிறார் என்றால், அப்பா அப்பாவிதானே!

உண்மை தெரிந்தால் அரண்டு போவார் பாவம்!

வழக்கமாக ஞாயிற்றுக் கிழமைகளில் அப்பாவும் மகளுமாக நிறைய விஷயம் அலசுவார்கள். இன்று தொடக்கத்திலேயே திரை விழுந்து விடவும் சௌதாமினிக்குப் போர் அடித்தது.

''நேரம் கிடைக்கும் போது படித்துப் பார்'' என்று ரவீந்திரன் சில கதைப் புத்தகங்கள் கொடுத்திருந்தான். அவற்றுள் ஒன்றை எடுத்துக் கொண்டு படுக்கையில் சாய்ந்தாள் அவள்.

சற்று நேரம் படிக்குமுன்பே முகம் கன்ற எரிச்சலுடன் புத்தகத்தை மூடி வைத்து விட்டாள்.

முழுக்க முழுக்க செக்ஸ், செக்ஸ், செக்ஸ்தான்.

கதை நடுவே செக்ஸைக் கொண்டு வருவதற்குப் பதிலாகவே செக்ஸ் நடுவே கதையைத் தேட வேண்டியிருந்தது.

இதை அவன் படிப்பதோடு அவளிடம் வேறு கொடுத்தானே!

ஒன்று தோன்றவும் அவசரமாக அந்தப் புத்தகங்களை எடுத்துக் கண்மறைவாக வைத்து விட்டு வந்து உட்கார்ந்தாள். அம்மா, அப்பா கண்ணில் பட்டால் அசிங்கம்.

மனம் மீண்டும் ரவீந்திரனிடம் சென்றது.

கண் நிறைந்தவன் ரவீந்திரன். ஓரளவு கை வளமும் உடையவனே... எப்போதும் அவனது பார்வை அவளையே தொடர்வதை அவள் கண்டிருக்கிறாள். 'மாப்பிள்ளைக்கு எங்கள் சதுவிடம் ரொம்ப ஆசை' என்று அம்மா பிறரிடம் கூறும்போது பெருமையாகக் கூட இருக்கும்.

ஆனால் அவளை நவியே சந்தித்துச் சிலுமிஷங்கள் செய்யத் துடிக்கும் போதுதான் பிசிறடித்தது.

கிணற்று நீர்தானே, வெள்ளமா கொண்டு போய் விடும் என்றால் அவனுக்குப் புரிவதில்லை. திருட்டு மாங்காய் போல உரிமையற்ற சுகத்தில் அவனுக்கு விருப்பம் இருக்கலாம். ஆனால் அவளுக்கு அப்படி இல்லையே!

ஒரொரு சமயம் சௌதாமினிக்கு உள்ளூரப் பயம்கூட வந்துவிடும். இப்போது இவன் தோளில் கை போட்டால் கம்பளிப்பூச்சி ஊர்வது போல அருவருப்பாய் இருக்கிறதே. திருமணம் ஆனபிறகும் இப்படியே இருந்து விடுமோ என்று அஞ்சுவாள். தாயிடம் கூட சொல்ல முடியாமல் தவித்துப் போவாள்.

பிறகு அப்படியெல்லாம் ஒன்றும் இல்லை. உரிமையற்ற நிலை என்பதால் வந்த ஒதுக்கம்தான். திருமணம் ஆனால் எல்லாம் சரியாகிப் போகும் என்று தன்னையே சமாதானம் செய்துகொள்வாள்.

ஆனால் முடிந்த அளவு அவனோடு தனியாக இருக்கக்கூடிய சந்தர்ப்பங்கள் நேராமல் கவனத்துடன் இருக்கத் தொடங்கினாள். சந்தர்ப்பம் கிடைத்தால் தானே ரவீந்திரன் சிலுமிஷம் செய்யவும், அவள் அதை வெறுக்கவும் முடியும்? வாய்ப்பே இல்லாது போய்விட்டால்?

ஆனால் அப்போதும் ஒரு நாள் அவனிடம் தனியே சௌதாமினி மாட்டிக் கொள்ள நேர்ந்தது.

2

அன்று கொஞ்சம் 'ஷாப்பிங்' முடித்து தந்தையோடு வீடு திரும்பிக் கொண்டிருந்தாள் சௌதாமினி.

வழியில் பார்த்துவிட்டு, "நீங்கள் போய்க் கொண்டு இருங்கள் மாமா, நானும் மினியும் அந்த

ஓட்டலில் டிபன் சாப்பிட்டு விட்டுக் கொஞ்ச நேரம் பேசிக் கொண்டு இருந்துவிட்டு வருகிறோம்" என்றான் ரவீந்திரன்.

நல்ல பகல் வேளை.

நழுவந்த முறுவலுடன் "என்ன மினி, ஒரு காபி டிபன் தானே! வாயேன். ஒரு வாரமாய் நிரனையே கிடைக்கவில்லையே!" என்ற போது அவளாலும் மறுக்க முடியவில்லை.

ஓட்டலில் ஒரு பொது இடத்தில் டிபன் காபி தானே. இதில் பிரச்சனை இராது என்று எண்ணித் தந்தையைப் பார்த்தாள் சௌதாமினி.

மகளின் பார்வையில் ஒப்புதலைக் காணவும், "சாமான்களை நான் கொண்டு போய்விடுகிறேன் பாப்பா. நீ மாப்பிள்ளையோடு போய் வா. எதுவும் இருட்டுமுன் வீடு வந்து விடுங்கள், மாப்பிள்ளை." என்று விடை பெற்றுச் சென்றார் சிவஞ்.

பெரிய ஓட்டல் அது.

சாப்பாட்டு அறை மாடியில் என்று விபரம் அழைத்துச் சென்றான்.

"இந்த மாதிரி ஓட்டல்களில் முன் கூட்டியே ஏற்பாடு செய்யாவிட்டால் 'டேபிள்' கிடைக்காது என்பார்களே!" என்று அவள் வினவவும் அவன் சிரித்தான்.

"எல்லாம் 'ரிசர்வ்' செய்தாயிற்று.... ஆச்சரியமாய் இருக்கிறதா? நேற்று உன் அப்பாவைப் பார்த்த போது இன்றைய 'ஷாப்பிங்' பற்றிச் சொல்லிக் கொண்டிருந்தார். பாவம், அலைந்து திரிந்து களைத்திருப்பாய், ஒருவாய் காபியாவது தரலாம் என்று நினைத்து ஏற்பாடு செய்து விட்டேன்." என்றான் பெருமையாக.

"பாவம் அப்பாகூடக் களைத்துத்தான் இருப் பார். அவரையும் கூட்டி வந்திருக்கலாம்." என்று அவள் கூறவும் அவன் உரக்க நகைத்தான். காரணம் அவளுக்கு அப்போது முழுமையாக விளங்கவில்லை. இளவட்டப் பேச்சில் அவர் எதற்கு? என்று நினைக்கி 'றாள் என்று மட்டும்தான் எண்ணினாள்.

ஆனால் 'விப்டில்' இருந்து வெளியே வந்ததும் சற்று நடந்தவள், ஒரு கதவின் முன்னே நின்று, "இங்கே தான். இந்த ரூம்தான் நமக்குப் போட்டிருக்கி றேன்" என்று கூறவும் அப்படியே ஆணிஅறைந்தாற் போல நின்று விட்டாள்.

'ஸாரி' என்று நல்வதனமாகவே மறுத்தாள்.

ஆனால் இவ்வளவு தூரம் வந்து விட்டவனுக்கு விட மனம் இல்லை. "எதுவானாலும் உள்ளே வந்து பேசலாமினி" என்றவளின் விழிகளில் இருந்த ஒன்று உள்ளே சென்றால் என்ன நடக்கும் என்பதை உணர்ந்தி விடவே அவள் அசையவில்லை.

"உங்களை நம்பி என்னை உங்களோடு அனுப்பி யிருக்கிறார், அப்பா. அந்த நம்பிக்கைக்குத் துரோகம் செய்யக் கூடாது - வாருங்கள் திரும்பிப் போகலாம்."

"திரும்பிப் போவதற்காகவா ஐநூறு ரூபாய் கட்டி ரூம் போட்டு இவ்வளவு வேலை செய்திருக்கிறேன். சரிதான் வாடி" என்று அவன் அவளது கையைப் பற்ற முயலவும் சௌதாமினி சட்டெனப் பின்னடைந் தாள்.

கடவுளே! என்னதான் அவளிடம் ஆசை என்றா லும் இப்படியா?

தனக்கு ரொம்பவும் வெறுப்பேறி விடாமல் அவனுக்கும் வெறுப்பேற்றி விடாமல், சீக்கிரம் விலகி விட வேண்டும் என்று எண்ணி, "என்னால் முடியாது

ரவீந்திரன் வாருங்கள் போகலாம்" என்று திரும்பி ஓர் எட்டு எடுத்து வைத்தாள்.

"இப்போது நீ போகிறாய் என்றால் அதற்கு ஒரே ஒரு காரணம்தான் இருக்க முடியும்" என்றான் அவன் ஆத்திரத்துடன்.

"ஆமாம். திருமணத்தை நான் புனிதமாக நினைக்கிறேன். அதற்கு முன் அந்து மீறலது எனக்குப் பிடிக்காது" என்றாள் அவள் திருந்தமாக. சொல்வ தைப் புரிந்துக் கொண்டு ரவீந்திரன் நல்வதனமாக திரும்பி வந்துவிட்டால் எவ்வளவு நன்றாக இருக்கும்!

"இல்லை, அதுவல்ல காரணம். உண்மைக் கார ணத்தை நான் சொல்லுகிறேன்" என்று அவன் முழுங்க வும் என்னது என்பது போல, யோசனையாக அவ னைப் பார்த்தாள் அவள்.

"ஒருவேளை திருமணத்துக்கு முன்னால் நான் செத்துவிட்டால் அடுத்து வருகிறவனுக்காக உன்னைத் தூய்மையாக வைத்துக் கொள்ள என்னுகிறாய். அது தான் காரணம்" என்று ரவீந்திரன் கூறவும் அவளுக் குத் திக்கென்றது. "அல்லது இப்போதே இன்னொரு வன் மேலும் எண்ணம் வைத்திருக்கிறாயோ என னவோ?"

என்னமாய் தைக்கும்படி பேசுகிறான்!

அவள் அடிபட்டாற் போலத் திகைத்து நிற்கும் போதே, அவனது கண்களில் வெறிப் பளபளப்பைக் காணவும் தான், ரவீந்திரன் இந்த வார்த்தைகளைத் துருப்புச் சீட்டாக பயன்படுத்தியிருக்கிறான் என்பது அவளுக்குப் புரிந்தது.

அவளானால் கண்டு கொண்டாள். ஆனால், கண்டு கொள்ளாமல் எத்தனை பெண்கள் இந்த அடி டில் வீழ்ந்திருக்கக் கூடும்?!

ஆனாலும், இதற்கு என்னவிதமாய்ப் பதில் சொல்வது என்ற அறியாமல் அவள் தடுமாறவே செய்தாள்.

அதைப் பயன்படுத்திக் கொள்ளும் ஆவலில் ரவீந்திரன் ஒரு நவறு செய்தான். வெற்றி கிட்டி விட்டதாக எண்ணி அவளது கையைப் பற்றி அருகே இழுக்கவும், அனிச்சையாய் அவள் கையை உதறித் தன்னை விடுவித்துக் கொள்ள முயன்றாள்.

அப்போது, "விரும்பாதவள் விலைமகள் என்றாலும் தொடக்கூடாது" என்று அருகே ஓர் அதிகாரக் குரல் கேட்கவும் இருவருமே அதிர்ந்து போயினர்.

தூக்கிவாரிப் போட்டுக் கொண்டு திரும்பிப் பார்த்தால் காரிடாரின் எதிர்ப்புறம் இருந்த ஓர் அறைக் கதவு பாதி திறந்திருக்க, கிண்டல் சிரிப்பும், கையில் சிகரெட்டுமாய் ஒருவன் கதவு நிலையில் இலகுவாகச் சாய்ந்தபடி நின்று கொண்டிருந்தான்.

இவன் எப்போதிலிருந்து இங்கே நின்று கொண்டு இருந்திருப்பான்?! என்னவெல்லாம் கேட்டிருப்பான்! கேவலம்!

காலின் கீழ்த்தரை பிளந்து உள்ளே போய் விட மாட்டோமா என்றிருந்தது சௌதாமினிக்கு.

ஆனால் அதிலும் கஷ்டம். தரை பிளந்தாலும் அடுத்த நனந்தில்தான் விழுந்தாக வேண்டும்.

சௌதாமினி அவமானத்தில் குன்றிக் கொண்டிருந்த போது ரவீந்திரன் ஆத்திரத்தைக் காட்டினான்.

வருங்கால மனைவி என்று ஆனவளின் மறுப்பிலேயே கொதித்துப் போயிருந்தவன் இப்போது தன் கோபத்தை எல்லாம் இடையில் வந்தவனிடம் காட்டினான்.

"இது எங்கள் சொந்த விஷயம். இதில் தலையிடாமல் ஒதுங்கிப் போ" என்றான் ஏகவசனமாக.

"உங்கள் சொந்த விஷயம் என் ஒய்வைக் கெடுக்கிற அளவுக்கு வந்திருக்கக் கூடாது."

"ஏய் மரியாதையாக வாயை மூடிக் கொண்டு போடா, ராஸ்கல்!"

சின மிகுதியால் ரவீந்திரனின் முகம் செங்குரங்காய்த் தோன்றுவதைத் திகைப்புடன் கண்டாள் சௌதாமினி. கட்டுப்பாடு இழந்து அவன் கத்துவது வேறு அவளை மிரள வைத்தது. கூட்டம் கூடி அவமானப் படாமல் இங்கிருந்து கிளம்புவது எப்படி என்று அவசரமாக யோசித்தபடி, "ரவீந்திரன்" என்று மெல்ல அழைத்தபடி, இன்னமும் அவன் பிடியிலிருந்து தன் கையை உருவிக் கொள்ள முயன்றாள்.

அவளது முயற்சியைக் கவனித்து, "மரியாதை தெரிந்தவன் பேச்சா இது? முதலில் அந்தப் பெண்ணின் கையை விடு, மிஸ்டர்." என்றான் புதியவன்.

"அதைச் சொல்ல நீ யாருடா?" என்று குரலைத் தணிக்காமலே மீண்டும் அலறினான் ரவீந்திரன்.

"காத்தவராயன்" என்றான் புதியவன் இலகுவாகவே. "இப்போது அந்தப் பெண்ணைக் காப்பாற்ற வந்திருக்கிறேன்"

பெயருக்கும் ஆளுக்கும் பொருத்தம் இல்லையென்ற எண்ணம் தோன்றிய விரைவிலேயே மறைய, சௌதாமினி மீண்டும் நடப்புக்கு வந்தாள். இந்த ரசாபாசத்தை எப்படி நிறுத்துவது? நிறுத்தமுடியாது என்பது போல, "காப்பாற்றுவாயா? மூஞ்சியிலேயே...?" என்று அவளை உதறிவிட்டு முன்னே ஓர் எட்டு எடுத்து வைத்தான் ரவீந்திரன்.

ஆனால் சற்றும் அசையாமல் அந்தக் காத்தவரா யன் நின்ற நிலையில் ஏனோ தயங்கி நின்றான்.

உதட்டோரம் ஓர் ஏளன வளைவுடன், ''இதோ பார், ஒட்டல் அதிகாரிகள் வந்து, ரசாபாசம் ஆகி, உன் மரியாதை கெடுமுன் இங்கிருந்து வெளியேறிவி டு'' என்றான் மற்றவன்.

''உன்னைப் போலவே பணம் கட்டி ரூம் போட்டி ருக்கிறேனாக்கும். என்னை வெளியேற்ற உன்னால் முடியாதுடா'' என்று மார்தட்டினான் ரவீந்திரன்.

''முடியும். கணவன் மனைவி என்று ரூம் ''புக்'' பண்ணியிருப்பாய். இல்லை என்பது எனக்குத் தெரிகி றது. அது அதிகாரிகளுக்கும் தெரியும்போது நீ கம்பி என்னக் கூட நேரிடலாம். அந்த அளவுக்கு நான் செல்லுமுன் நீயாக விலகிப் போய்விடுவது உனக்கு நல்லது'' என்று அசையாமல் நின்று எச்சரித்தான் அந்தக் காத்தவராயன்.

ஆங்காரத்துடன் சௌதாமினியின் பக்கம் திரும் பினான் ரவீந்திரன். ''சந்தோஷம் தானே? என்னமோ பெரிய நளாயினி, சாவித்திரி என்று எண்ணம். கற்பு காக்கிறாளாம். கற்புதான் காக்கிறாயோ அல்லது வேற எவளையும் மனதில் வைத்துக் கொண்டு என்னைத் தொட விடவில்லையோ. வேணுமானால் அவளி டமே போய்த்தொலை'' என்றவன் அதற்கு மேல் அவளைத் திரும்பியும் பாராமல் மடமடவென்று சென் றவன், 'லிப்டு'க்குக் கூடக் காத்திராமல் படி வழியா கவே இறங்கிச் சென்று மறைந்தான்.

உதட்டைக் கடித்துக் கொண்டு தலை குனிந்து நின்றாள் கண்டபடி கத்தின ரவீந்திரன் இவ்வளவு கோபமாகப் போகிறான் என்பதைவிட சௌதாமினி

இவனுக்கு நன்றி சொல்வது எப்படி என்பதுதான் அவளைக் குழப்பியது.

ஏனோ அவனிடம் பேசுவது மிகவும் கடினமாகத் தோன்றியதோடு, அவனிடம் நிலைமையை என்ன வென்று விளக்குவது?

ஒரு பெரிய மூச்செடுத்துக் கொண்டு அவள் நிமிர்ந்த போது, ''கொஞ்சம் அழகாக இருந்தாலே தொல்லைதான். அதிலும் இவ்வளவு அதிக அழகாக இருக்கும்போது அந்த மாதிரித் துன்பங்கள் ஏற்படு வது இயல்புதான்.'' என்று முறுவலித்தான் அவன்.

வரிசையான வெண்பற்கள் மின்னலாய்ப் பளீ ரிட, அவள் மேலும் திகைத்து நின்றாள்.

''ஆனால் இப்படி ஒருத்தனை நம்பி உடன் வந்ததுதான் சரிஇல்லாத ஒரு பிரமையைத் தோன்று கிறது.'' என்று அவன் தொடர்ந்து பேசவும் ஒருவாறு சுதாரித்தாள்.

''அவர்... அவர் என்னை மணக்கப் போகிறவர். நயவு செய்து தவறாகப் பேசவேண்டாம்.'' என்றாள் முடிந்த அளவு அழுத்தமான குரலில்.

திடுக்குற்றாற் போல நிமிர்ந்த அவன் முகத்தில் ஏமாற்றம் அல்லது அருவெறுப்பு போன்ற ஓர் உணர்ச்சி தோன்றி, தோன்றிய வினாடியிலேயே மறைந்தது.

மறுபடியும் இலகுவாகச் சாய்ந்து கொண்ட அவன் குரலில் பழைய கேலி இழையோடியது. ''ஓகோ காதல் உலகமா? ஆனால்....காதல் உணர்வு இரு பாலருக்கும் பொது என்பார்களே! இங்கே பார்த்த நாடகம் வேறு கதை சொல்லியதே!''

மீண்டும் தூக்கி வாரிப் போட்டது சௌதாமினிக்கு.

அப்படியானால் அவளுக்கு ரவீந்திரன் மேல் அன்பு இல்லையா? அல்வளவு நேசம் இருந்திருந்தால் இப்படி மறுக்கத் தோன்றியிராதோ? அப்படியானால்.... சேச்சே.

இந்த ஆள்... இந்த காத்தவராயன் குழப்புகிறான். பெயரைப் போலத்தான் புத்தியும் இருக்கு? இந்தக் காத்தவராயன் சொல்படிப் பார்த்தால் திருமணத்துக்கு முன் அத்தனை பேருமல்லவா உறவு கொண்டிருக்க வேண்டும். சேச்சே.

மிடுக்காகத் தலைநிமிர்ந்து, "நம் நாட்டுப் பண்பாடு என்ற ஒன்று இருக்கிறது தெரியுமா?" என்றாள் அவனைப் போலவே கிண்டல் குரலில்.

"அப்படியா!" அவன் அதிசயமாகவே வியந்தான். உன் ஆளைப் பார்த்தால் வேற்று நாட்டான் போலத் தோன்றவில்லையா! ஒரு வேளை எனக்குத் தான் கண்டுபிடிக்கத் தெரியவில்லையோ என்னவோ. ஆமாம், அவர் எந்த நாட்டு மனிதர்?"

கீழுதட்டின் மேல் பற்கள் அழுந்திய வேகத்தில் ரத்தம் கசிந்தது அவளுக்கு. இவனிடம் பேச்சுக் கொடுப்பது பெரிய தப்பு. வாயைக் கொடுத்து வம்பை விலைக்கு வாங்காமல் சீக்கிரம் கழன்று கொள்வதே மேல்.

"பாருங்கள், ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு கோட்பாடு. அத்தோடு இது எங்கள் விஷயம். இதில் நீங்கள் தலையிடுவது நவறு...."

தலையைச் சரித்து குறுநகையோடு அவன் பார்த்த விதத்தில் சௌதாமினியின் முகம் சிவந்தது. அவனது தலையீட்டால் நப்பிவிட்டு, தலையிடாதே என்பது எவ்வளவு முட்டாள்தனம்!

மீண்டும் சற்றுத் தணிவிட்டு, "வந்து...நன்றி" என்று ஒருவாறு நன்றியுரைத்து முடித்துவிட்டு, "நான் வருகிறேன்" என்று விளம்பினாள்.

"நன்றி உள்ளத்திலிருந்து வந்தது என்றால் இலவசமாக ஓர் ஆலோசனை வழங்கலாமா?"

"எ.... என்ன?"

"அவன், தகுதியற்றவன். அவனை மணக்க வேண்டாம்." என்றான் ஆழ்ந்த குரலில் அவன்.

தப்பு, நின்று இவன் பேச்சைக் கேட்பது மகாப் பெரிய தப்பு.

ஆத்திரத்துடன் அவனை உறுத்து விழிந்து விட்டு மடமடவென்று நடந்து அங்கிருந்து வெளியேறினாள் சௌதாமினி.

"என்னம்மா, தனியே வருகிறாய்? மாப்பிள்ளை எங்கே?" என்று விசாரித்த தந்தையிடம், "வேறு ஓர் இடத்துக்குப் போகவேண்டுமாம் அப்பா" என்று சமாளித்து வைத்த போதும் உள்ளூர அவளுக்கு ஒரே கவலை. ரவீந்திரன் மிதமிஞ்சிய கோபத்தில் சென்றான். ஒரு வேளை ஆத்திரமிருதியால் திருமணத்தையே நிறுத்தி விடுவானோ? அப்படி நிறுத்தினால் அப்பா மனம் ஒடிந்துவிடுவாரே?

3

ஆனால் நடந்தது எதையும் பெற்றோரிடம் சொல்லவும் அவளுக்குப் பிடிக்க வில்லை. ஒரு வேளை இந்த அச்சம் அவசியமற்றதாக ஆனால், பாவம். அவர்களையும் வீணாகக் கலங்க வைப்பானேன்?

அச்சம் அவசியமற்றதாகக்கூடும் என்று அவளுக்குக் கொஞ்சம் நம்பிக்கையும் இருந்தது.

ஏனெனில் இதற்கு முன்பும் பல சந்தர்ப்பங்களில், பிறர் அறியாமல் அவளை ரவீந்திரன் தொட முயன்ற போது பட்டென்று கையை தட்டி விட்டிருக்கிறாள். ஒரு தரம் அடுத்த அறையில் இருவருடைய பெற்றோ ரும் இருந்து பேசிக் கொண்டு இருந்தபோது, அவர்க ளுக்குக் குளிர்பானம் எடுத்து வர அவள் உள்ளே சென்றபோது, பின்னோடு வந்து அவளைக் கட்டிப் பிடிக்க முயன்றான் ரவீந்திரன். அப்போது அவள் தள்ளி விட்ட வேகத்தில், அதை எதிர்பார்த்திராத அவன் கீழேயே விழுந்து விட்டான்.

அப்போதும் ஆத்திரப் பட்டானே தவிர, அந்த ஆசையை விட்டானில்லை.

ஆனால் இப்போது கொஞ்சம் பெரிய தொகை செலவானதோடு அடுத்தவன் முன்னிலையில் அவமா னப்பட நேர்ந்ததும் சேர்ந்து எந்த அளவுக்கு பாதித்தி ருக்குமோ என்று இருந்தது அவளுக்கு.

கூடவே தன்னிடமும் பயம். இப்படியே வெறுத் துப் போய்விடுமோ என்று.

மெல்லத் தாயிடம் கேட்டாள், "உங்கள் திரும ணம் நிச்சயமானதும் அப்பா எப்படி இருந்தார்?" என்று.

பழைய நினைவில் சிரித்துவிட்டு, "இருபத் தைந்து ஆண்டுகளுக்கு முன்பல்லவா? இப்படி வீட் டுக்கெல்லாம் வந்து போக முடியாது. வீட்டுப் பக்கம் வரவழியில்லை என்று எங்கள் கல்லூரியைச் சுற்று வார். பஸ்சுக்குப் போகிற வருகிற வழியில் யாரோ போல வந்து மோதிவிட்டுப் போவார். சொல்லவும் முடியாமல் மெல்லவும் முடியாமல் எரிச்சலாக வரும். ஆனால் என்ன இந்த ஆள் என்று கூட நினைத்திருக்கி றேன்.... அப்புறம் எல்லாம் நன்றாகி விட்டது...." என்று நாணி முகம் சிவந்த தாயைப் பார்க்கையில் ஆச்சரியமாகவும் ஆறுதலாகவும் உணர்ந்தாள் சௌ தாமினி.

அத்தோடு அவள் அஞ்சியது போல எதுவும் நிகழாமல், மறுநாள் காலையிலேயே அவளைத் தேடி வந்து மன்னிப்புக் கேட்டான் ரவீந்திரன்.

"உன்மேல் எனக்கு எவ்வளவு காதல் தெரியுமா, டார்லிங். உன்னைப் பிரிந்திருக்கும் ஒவ்வொரு வினா டியும் எனக்குத் தீக்குள் இருக்கிற மாதிரி இருக்கிறது. நம் பெரியவர்களுக்கோ ஓர் இழவும் புரிவதில்லை. கல்யாண மண்டபம் கிடைக்கவில்லை என்று திரும ணத்தை நாலு மாதமா தள்ளிப் போடுவார்கள்? என்னால் தூங்கவே முடியவில்லை. உன் மேல் உள்ள ஆசை மிகுதியால் செய்த பிழை. ஆசை நிறைவேறாத கோபத்தில் வாயில் வந்ததை உளறிக் கொட்டி விட் டேன். தயவு செய்து மன்னித்து விடு கண்ணே!" என்று அவன் 'வசனம்' பேசவும் அவளும் இளகி அவனை மன்னித்து விட்டாள்.

அதன் பிறகு அவன் மகாகண்ணியவானாக நடந்து கொள்ளவே சௌதாமினியின் மனம் ஒருவாறு

அமைதியடைந்தது. ஒரு வகையில் தாயாருடன் பேசி யதும் அதற்குத் துணை செய்தது.

ஆனால் இன்னொரு வகையில் ரொம்பவும் அலை பாய்ந்தது. அந்தக் காத்தவராயன் அங்கே இங்கே அவள் செல்லுமிடமெல்லாம் தோன்றி அவளை நிம்மதியிழக்கச் செய்து கொண்டிருந்தான்.

அவனைப் பார்க்கும் போதெல்லாம், பழைய சம்பவம் நினைவுக்கு வந்து அவளைக் கூசச் செய்தது. அவளாக நினைக்கா விட்டாலும், ஒரு கேலியான பார்வை, உதட்டை ஒருபுறம் சுருக்கி ஒரு சிரிப்பு, நுனி விரலால் நெற்றியைத் தொட்டுக் கிண்டலாக ஒரு சலாம் என்று அவன் அதை நினைவூட்டிக் கொண்டே இருந்தான்.

ஒருநாள் பொறுக்க மாட்டாமல் அவனிடம் வாய் திறந்து கேட்டே விட்டாள் அவள். ''நான் போகிற இடங்களுக்கெல்லாம் நீங்கள் ஏன் வருகிறீர்கள்?'' என்று மனதில் உறுத்தியதை ஒரு வேகத்தில் அவனி டம் கேட்டு விட்டாள் சௌதாமினி.

ஆனால் உடனேயே ஒற்றைப் புருவத்தைத் தூக்கி, ''என்ன என்ன? நீ செல்கிற இடத்திற்கெல்லாம் நான் பின் தொடர்ந்து வருகிறேனா? இதையே நானும் கேட்க முடியாதா? சொல்லு சௌதாமினி, நான் போகிற இடங்களுக்கெல்லாம் நீ ஏன் வருகிறாய்?'' என்று அவன் கேட்கவும் அவளால் பதில் சொல்ல முடியவில்லை.

உடனே சிவுக்கென்று திரும்பிச் சென்று விட்டாள் அவள். ஆனால் வீட்டுக்கு வந்த பிறகு ஒரே யோசனை. அவள் பெயர் அந்தக் காத்தவராயனுக்கு எப்படித் தெரியும்?

இரவெல்லாம் தூக்கமின்றி அதையே நினைத்துக் குழம்பியவள், மறுநாள் ரூப்பர் மார்க்கெட்டில் அவ

னைக் காண நேர்ந்ததும் அதையும் கேட்டு விட்டாள். ''என் பெயர் எப்படித் தெரியும்?''

அவன் பார்வை வழக்கம் போல அவளைக் கிண்டலடித்தது. ''ஏன், உன் பெயர் என்ன சிதம்பர ரகசியமா? அன்றைக்கு உன்னோடு வந்தவர் ஜாடை யைப் பார்த்தால் தந்தை என்று தோன்றியது'' உன்னை சௌதாமினி என்று அழைத்தாரில்லையா? அப்போது தெரிந்து கொண்டேன் என்றான்.

''அப்பாவா! அப்பாவா என்னைச் சௌதாமினி என்று அழைத்தார்!'' என்று ஆச்சரியப்பட்டாள் அவள். கோபம் வந்தால் தவிர அப்பா என்னை முழுப்பெயர் சொல்லி அழைப்பதே கிடையாதே. கண்ணு, சது... என்று மட்டும்தானே கூப்பிடுவார்!

''என்னது சதுவா? அழகான செல்லச் சுருக்கம் சது, சது'' என்று சொல்லிப் பார்த்து ரசித்தான் அவன். ''நன்றாய்த்தான் இருக்கிறது, சது.'' என்றான் தொடர்ந்து.

உள்ளே ஏதோ குறுகுறுக்க, சௌதாமினி சற்றுத் தடுமாறினாள். ஏனெனில் அவன் அழைத்த விதம் அவளுக்கும் நன்றாகத்தான் இருந்தது. அதிலும் ரவீந் திரனின் 'மினி'க்கு மேல் ஆயிரம் மடங்கு மேல்....

என்னம் ஓடிய விநாடியில் அவள் பிரமித்துப் போனாள். புத்தி புல்மேய்தான் வாயக்காகிக் கொண்டு வருகிறது. எவனோ ஒருவனைப் போய் அவளை மணக்க இருப்பவனோடு ஒப்பிட்டுக் கொண்டு.... மடத்தனம் வடிகட்டிய முட்டாள்தனம்!

நிமிர்ந்து நின்று, ''மற்றவர்களுக்கு என் பெயர் சௌதாமினி, மிஸ்டர் காத்தவராயன்'' என்று மிடுக்கு டன் அறிவித்தவள், அவன் விழுந்து விழுந்து நகைக்க வும் மீண்டும் திகைத்தாள்.

"ஏ...என் சிரிக்கிறீர்கள்?"

"என்னைக் காத்தவராயன் என்று அழைத்தாயே...."

"உங்...கள் பெயர் அதுதானே?"

"இல்லையே!"

"நீ... நீங்கள்தானே அப்படிச் சொன்னீர்கள்."

"எப்படி?"

"உங்கள் பெயர் காத்தவராயன் என்று."

"இல்லையே!"

இப்படி ஒரேமூட்டாய்ப் புளுகிறானே! இல்லை சொன்னீர்கள். நான் என் காதால் கேட்டேன். என்று விடாமல் சொன்னாள் அவள்.

"நீ உன் காதால் நான் கேட்கமுடியும்" என்று கேலியாகப் பேசியவன். அவள் முகம் கடுக்கவும். "அது ஒரு புறம் இருக்க. நான் எப்போது அப்படிச் சொன்னேன் என்கிறாய்?" என்று கேட்டான் அவன்.

"அன்றைக்கு ஒட்..." என்று தொடங்கியவள் நடுங்கினாள். அவன் சொன்னதை இடம் பொருள் ஏவலுடன் விளக்குவதானால். ரவீந்திரனின் பிழையையும். அன்றைய அசிங்கமான நிலைமையையும் கூடக் கூசாமல் எடுத்துச் சொல்லியாக வேண்டும். ஒரு வேளை அதற்காகத்தான் - அவளைக் கூசிக் குனிய வைப்பதற்காகத்தான். இப்படி நடிக்கிறானோ?

ஏறிட்டுத் தேடிய விழிகளில் பட்ட அவனது ஒற்றைப் புருவம் கேள்வியும் கேலியுமாக உயர்ந்த விதம் சவால்விட. "அன்றைக்கு ஒட்டலில் ரவீந்திரன் யார் என்று கேட்டதற்குக் காத்தவராயன் என்று பதில் சொன்னீர்களே?" என்று கொட்டி விட்டாள்.

"கொஞ்சம் அதிகப்படியாக நாகரீக வண்ணம் பூசி. 'யாரடா'வை 'யார்' என்றாக்கி விட்டாய் பரவாயில்லை. கட்டிக் கொள்ளப் போகிற கணவருக்காக இதுகூடச் செய்ய வேண்டாமா?.... இன்னமும் கட்டிக் கொள்ளப் போவது ரவீந்திரனைத் தானே?"

என்னதான் அழுத்தந்துடன் பேச முயன்றும். சௌதாமினியின் "ஆமாம்" கிசுகிசுப்பாய்த்தான் வெளி வந்தது

அவன் தோளைக் குலுக்கிவிட்டுச் சொன்னான்.

"அந்த நேரத்தில். கஷ்டத்தில் இருந்த ஒரு பெண்ணைக் காப்பாற்ற வந்தவன் என்பதைக் குறிக்க அப்படிச் சொன்னேன். காரணப் பெயர். மற்றபடி என்னைப் பார்த்தால் காத்தவராயன் மாதிரியா இருக்கிறது?" என்று படு ஸ்டைலாக நிமிர்ந்து நின்று விசாரித்தான்.

இல்லை என்று அன்றைய அவலத்தில் கூட நினைத்தது சௌதாமினிக்கு நினைவு வந்தது. அதைச் சொல்ல மனமற்று. அவன் நின்றதோரணையில் வந்த சிரிப்பையும் மறைக்க முயன்றபடி. வெறுமனே தலை யசைத்துவிட்டுக் கிளம்பினாள்.

"ஒன்றை மறந்துவிட்டுப் போகிறாயே?"

"என்....னது?"

"என் பெயர்! அது தெரியவேண்டாமா?"

"விருப்பம் இருந்தால் சொல்லுங்களேன்!"

"விருப்பமா? என் விருப்பம் சொன்னால் அடிக்க வரவும் கூடும். அதனால் இப்போது என் பெயரை மட்டும் சொல்கிறேன். என் பெயர் நீலகாந்தன். நீல் என்று நண்பர்கள் அழைப்பார்கள்.

ஆனால்... யாராவது காந்தன் என்று கூப்பிட்டாலும் எனக்கு மகிழ்ச்சிதான்'' என்று முறுவலித்தான் அவன்.

இதை ஏற்று, இவளைக் காந்தன் என்று நான் அழைக்க வேண்டுமாக்கும். ஆனாலும் இந்தக் காந்த நூக்கு கொஞ்சம் கொழுப்பு அதிகம்தான் என்று எண்ணியவள், 'இந்தப் பக்கத்துப் பெயராகத் தெரிய வில்லையே. இங்கே நீலகண்டன் என்றுதான் கேள்விப் பட்டிருக்கிறேன்.'' என்றாள் முயன்று கொணர்ந்த சாதாரணக் குரலில்.

''வடக்கே அதிகம். அப்பாவுக்கு அந்தப் பெயரில் ஏனோ ஒரு மோகம். அருமருந்தன்ன புத்திரனுக்கு அலைந்து ஆசையைத் தீர்த்துக் கொண்டார். வெறும் இடுகுறிப் பெயராக வைத்தது. அப்புறமாய்ச் சற்று கருநிறமாய் ஆனதினாலும், காந்தம் போலப் பிறரைக் கவர்ந்து இழுத்ததினாலும் காரணப் பெயராகவும் ஆயிற்று''

நீலகாந்தன் விளக்கிய விதத்தில் தன்னை மீறி புன்னகைத்து விட்டு, தமிழ் இலக்கணம் தண்ணீர் பட்டபாடு போலத் தெரிகிறது.'' என்றாள் அவள். ''நான் என்ன படித்திருக்கிறேன் என்று அறிந்துகொள்ளும் ஆவலில் கேட்டதனால் தாராளமாய்ச் சொல்லுகிறேன். பொருளாதாரம் ஏம்.ஏ. மேலே எம்.பி.ஏ. பட்டத்தையும் சேர்த்துக் கொண்டிருக்கிறேன். அப்புறம் கணவன் பட்டம்...''

முச்சு நின்றுவிட, அவனை ஏறிட்டு பார்த்தாள் சௌதாமினி. ''கணவன் பட்டம்?''

முறுவலித்து, ''கணவன் பட்டத்தையும் பெற்றுக் கொள் என்கிறார், அப்பா. ஆனால் அதை மற்றப் பட்டங்கள் போலத் தனி முயற்சியில் பெற முடியாதே! துணையைத் தேடோ தேடென்று தேடிக் கொண்டிருக்கிறேன்.'' என்றான் அவன்.

ஏனோ நீலகாந்தனின் பேச்சில் கவரசியம் குன்றிவிட, ''நான் போக வேண்டும்'' என்று கிளம்பி விட்டாள் சௌதாமினி.

பல நாட்கள் வெளியே செல்ல மனம் இல்லாமல் வீட்டோடு அடைந்து கிடந்தாள்.

கம்மா இருந்த நேரத்தை வீணாக்காமல் சமையல் கற்றுக் கொள்ளவும் சாரதாவுக்குப் பெருமகிழ்ச்சி. இப்போதுதான் பெண்ணாய் லட்சணமாய் நடந்து கொள்கிறாளாம்.

ரவீந்திரன் அவ்வப்போது வந்தான். வெகு கண்ணியத்துடன் வருங்கால மாமனாருடன் உட்கார்ந்து பேசி, பலகாரம் உண்டு விட்டுப் போனான்.

சௌதாமினியிடம் ஏக்கம் இழையோடிய புன்னகை மட்டுமே அதிகப்படி. மற்றபடி, மற்றவர்களோடு பேசுவது போல பழகவும் அவளுக்கும் உள்ளூர இருந்த இறுக்கம் அகன்று இயல்பாக இருக்க முடிந்தது.

அவ்வப்போது எங்காவது வெளியே போய்வரலாம் என்று ரவீந்திரன் அழைப்பது உண்டு. இப்போது அவன் நடந்து கொள்ளும் முறை நம்பிக்கை ஊட்டினாலும் கூட உள்ளூர ஏதோ ஒரு நயக்கம் தோன்றி அவனோடு செல்லவிடாமல் அவளைத் தடுத்தது.

அவன் வருந்துவதும் பிடிக்காமல் ஏதாவது சாக்குப் போக்கு சொல்லியே அந்த மாதிரி நிலைமையைத் தவிர்த்து விடுவாள்.

காலம் மெல்ல மெல்ல நகர்ந்தது.

ஒரு நாள், திருமணச் சேலையைப் பார்த்து வாங்க அவளும் கூட வரவேண்டும் என்று ரவீந்திரனுடைய தங்கை சௌதாமினியை அழைக்க வந்தாள்.

"காரில் அழைத்துப்போய், திரும்பிக் காரில் கொண்டு வந்து விட்டு விடுகிறேன்" என்று பெருமையுடன், அவர்கள் வீட்டுக் காரை பழைய அம்பாசிடரைக் காட்டினாள்.

ஆனால் சிவகுருவின் ஸ்கூட்டருக்கு அது எவ்வளவோ உயர்வாகத்தான் தோன்றியது.

காரோட்டியின் இடத்திலிருந்து அழகாகப் புன்னகை செய்தான் ரவீந்திரன்.

அழைப்பவள் அவனுடைய தங்கை ராணி. வாங்கப் போவது கல்யாணச் சேலை. இவ்வளவு இருந்தும் ஏனோ பெரிதாக உற்சாகம் உண்டாகவில்லை சௌதாமினிக்கு.

"போய் வாயேண்டி" என்றாள் சாரதாவும்.

"கல்யாணச் சேலை பற்றியெல்லாம் எனக்கு என்னம்மா தெரியும்?" என்று அப்போதும் தயங்கினாள் மகள்.

"எங்கள் அம்மா அதெல்லாம் பார்த்துப் பொறுக்கி வைத்துவிட்டார்கள் அண்ணி. நாலைந்து சேலைகள் தனியே எடுத்து வைத்திருக்கிறார்கள். அதில் உனக்கு எது பிடிக்கிறது என்று பார்த்துச் சொன்னால் போதும். ப்ளீஸ், வா, அண்ணி." என்று சலுகையோடு உறவு கொண்டாடினாள் ராணி.

"இவ்வளவு சொல்கிறாளில்லையா, போய் விட்டு வா. பட்டுப்புடவை வாங்கப் போகிறாய். கொஞ்சம் பளிச்சென்று டிரஸ் பண்ணிக் கொண்டு போ. அந்தப் பெண் மாதிரிக் கொஞ்சம் ஸ்டைலாகவே போ. அந்த ஜரிகை வேலை செய்த சரிதாரைப் போட்டுக் கொள்!" என்று விரட்டி உடையணியச் செய்தாள். உடையணிந்து வந்து கைப்பையை எடுக்கும் முன், "சீக்கிரம், சம்பந்தி அம்மா கடையிலேயே இருக்கிறார்கள் போல. சீக்கிரம் கிளம்பு" என்று மகளை மேலும் விரட்டினாள் சாரதா.

ஏதோ சொல்ல வாயெடுத்து விட்டு மௌனமானாள் ரவீந்திரனுடைய சகோதரி.

துணிக் கடையில் ரவீந்திரனுடைய அன்னை இல்லை.

ஆனால் ராணி சொன்னது போல நாலைந்து சேலைகள் தனியே எடுத்து வைக்கப் பட்டிருந்தன.

"அம்மா வீட்டிற்குப் போய் விட்டார்கள் போல....." என்றபடி, அண்ணனை ஒரு பார்வை பார்த்துவிட்டுச் சேலைகளைக் காட்டினாள் அவள்.

பத்தாயிரம் பனிரண்டாயிரம் என்று சரிகையும் பளபளப்புமாக விலை உயர்ந்த சேலைகளைக் காணவும் உள்ளூரப் பெருமிதமாய் உணர்ந்தாள் சௌதாமினி.

அவள் நேர்ந்தெடுத்த சேலையையும் அவளையும் மாறிமாறிப் பார்த்து விட்டுக் கண்கள் கொருவது போல ரவீந்திரன் பாவனை செய்யவும் சௌதாமினிக்குச் சிரிப்பு வந்தது.

கொஞ்சம் முன்பணம் கொடுத்து, அந்தச் சேலையை மட்டும் தனியாக எடுத்து வைக்கும் படியும், அதை மறுநாள் தாயார் வந்து மீதிப் பணத்தைக் கொடுத்து வாங்கிப் போவார்கள் என்றும் கூறி ஏற்பாடு செய்தான் ரவீந்திரன்.

பெண்கள் புறம் திரும்பி, "கிளம்புங்கள்," என்று உத்திர விட்டான்.

திரும்பிச் செல்லும் போது ராணி, சௌதாமினியிடம் வெகு உற்சாகமாகப் பேசலானாள்.

இவ்வளவு அழகான அண்ணி வருவது பற்றி அவளுக்கு ஒரே பெருமை என்கிற தொடன், சௌதாமினிக்கு என்ன நிறம் பிடிக்கும், சாப்பாடு, பொழுது போக்கு அது இது என்று உலகத்தில் உள்ள அத்தனை விஷயங்களையும் அலசி ஆராய்ந்து அவளிடம்

அபிப்பிராயமும் கேட்டான். என்னவோ சௌதாமினியின் அபிப்பிராயம் தான் அவனுக்கு அதி முக்கியம் போல.

வருங்கால நாத்தனாராயிற்றே. சௌதாமினியும் அவனது பேச்சில் கவனம் செலுத்தி சரியாக பதில்களை சொல்லி உரையாடலில் உரிய அளவு பங்கெடுத்துக் கொண்டாள்.

திடீரென்று, "அண்ணா, அண்ணா இங்கே நிறுத்துங்கள்." என்ற அவள் கூறவும் ரவீந்திரன் காரைச் சட்டென பிரேக் போட்டு நிறுத்தினான்.

நின்ற வேகத்திலேயே காரிலிருந்து இறங்கியபடி, "இங்கே ஒருவரைப் பார்க்கவேண்டும். அத்தோடு நான் ஏன் இன்னும் பாகைத் தும்பாக?" என்று கண்சிமிட்டிக் கார் கதவை அவள் அறைந்து சாத்தவும் கார் சட்டென்று வெருவாய் வேகம் எடுத்து ஓடத் தொடங்கியது.

"இந்த நேரத்தில் உங்கள் தங்கை இங்கே யாரைத் தனியாக...." என்றபடி, இது என்ன இடம் என்று பார்ப்பதற்காக வெளியே பார்வையை ஓட்டிய சௌதாமினி மேலும் திகைத்தாள்.

4

கூர் நகரத்தின் சந்தடிப் பகுதியைத் தாண்டி, புதிதாக இங்கொன்றும் அங்கொன்றுமாக முளைத்துக் கொண்டிருந்த புறநகர்ப் பகுதியில் விரைந்து சென்று கொண்டிருந்தது.

"நீங்...நாம் ஏதோ வழி தவறி விட்டோம் என்று நினைக்கிறேன், ரவீந்திரன்" என்றாள் கவலையுடன்.

அவளது பேச்சின் பின்பகுதியைக் கவனியாதவன் போல, "என் தங்கை அவருடைய காதலனைச் சந்திக்கப் போகிறாள். காதலனைச் சந்திக்கச் செல்லும் போது தனியாகப் போகாமல் அவளை இருவரும் கட்டிப் பிடித்து விளையாடுவதைக் காண ஒரு சாட்சி போடவா போவான்?" என்ற ரவீந்திரன் ஏதோ ஒரு பெரிய ஜோக்கைக் கேட்டவன் போலப் பகபகவென்று நகைத்தான்.

காதலனைக் கட்டிப் பிடிக்கவென்ற தங்கையை அண்ணனே அனுப்புவதா? நம் தமிழகம் இவ்வளவு முன்னேறிவிட்டதா?

"உங்கள் பெற்றோருக்குத் தெரியுமா?"

"அந்தப் பழங்காலங்களுக்கு இதெல்லாம் என்ன புரியும். உன் அப்பா கூடச் சொல்வாரே, "இருட்டு முன வீடு வந்து விடுங்கள். மாப்பிள்ளை...." என்று! சிவகுருவின் வார்த்தைகளை வேண்டுமென்றே இழுத்துப் பேசிப் பழிப்புக் காட்டினான்.

உள்ளூரப் பொங்கிய ஆத்திரத்தை அடக்கிக் கொண்டு, "காரைத் திருப்பி ஓட்டுங்கள். இது நாம் செல்ல வேண்டிய பாதை அல்ல" என்றாள் அவள்.

"சரியான பாதையில்தான் போகிறோம். எங்கள் ஆபீசில் எல்லோருமாகச் சேர்ந்து வாங்கிய பிளாட் ஒன்று எனக்கு இருக்கிறது என்றேனில்லையா? அது இங்கேதான் இருக்கிறது. கட்டுமானம் கூடத் தொடங்கி ஆயிற்று. நம் வருங்கால வீடாயிற்றே போய்ப் பார்த்துவிட்டுப் போகலாம்."

இனி மறுத்துப் பயன் இல்லை என்பதோடு மறுப்பதில் பயன் இல்லை என்றும் தோன்றிவிடவே பேசாமல் அமர்ந்திருந்தாள் சௌதாமினி.

வெறும் எல்லைக் கற்களோடும், அஸ்திவாரத்துக்குத் தோண்டிய நிலையிலும் சிறு சிறு 'பிளாட்'களின் நடுவே கார் இங்குமங்கும் புகுந்து சென்றது.

ஜன்னல் அளவுக்குக் கட்டிடம் எழும்பியிருந்த சிலவற்றையும் கடந்து கடைசியாக இருந்த அதே மாதிரியான ஒரு கட்டிடத்தின் பின்னே காரைத் திருப்பி நிறுத்தினாள் ரவீந்திரன்.

"கட்டத் தொடங்கி விட்டீர்களா?" என்று கேட்டபடி தானும் இறங்கினாள் சௌதாமினி.

"இல்லை... ஆனால், இது போலத்தான் நம் வீடும் வரும். உள்ளேப் போய்ப் பார்த்துவிட்டு வரலாம்."

என்னவோ அவளுக்குப் பழைய மாதிரி உறுத்தியது. இதே போலத்தான் வீடு என்றால் முதலில் இருந்த கட்டிடத்தையே காட்டியிருக்கலாம். சுற்றிச் சுற்றி இந்தக் கடைசிவரை ஏன் வரவேண்டும்? கண்ணுக்கெட்டிய வரையில் யாரையும் காணோமே!

இந்தப் பிளாட்டுகள் தொடங்குகிற இடத்தில் 'வாட்ச்மேன்' இருப்பிடம் போல ஒரு சிறு குடிசையைப் பார்த்தது அவளுக்கு நினைவு வந்தது. நூறு பிளாட்டுகளுக்கு முன்னதாக, எவனாவது திருட்டுப் பயல் வந்து காதில் கழுத்தில் கிடப்பதைப் பிடுங்க வந்தால், முழுசாய் மூசைப் பிடித்துக் கத்தினால் கூடக் காது கேட்க முடியாத அவ்வளவு தூரத்தில்.....

ரவீந்திரனைப் பின் தொடர்ந்து, அந்தக் கட்டிடத்தினுள் சென்று கொண்டிருந்த சௌதாமினிக்குச் சுரீலென உறைத்தது.

அப்படி யாருக்கும் எதுவும் கேட்கக் கூடாது என்பதற்காகவத்தான் ரவீந்திரன் இவ்வளவு தூரம் அவளை அழைத்து வந்தானா?

சேச்சே என்ன மடத்தனமான எண்ணம்! நாற்பதே நாட்களில் திருமணம் செய்யப் போகிற பெண் கத்திக் கதறும் அளவுக்கு யார் முரட்டுத் தனம் செய்வார்கள் என்று எண்ணும்போதே ஒட்டல் அறை நினைவு வந்தது.

"வாடி" என்று கையைப் பிடித்து இழுத்தானே!

என்ன பைத்தியக்காரத்தனம்!

அன்று அப்படி..... இன்று.... இன்னும் நாற்பதே நாட்கள்! இதற்குள் என்ன அவசரம்? இப்படி ஒரு முட்டாள் வேலை செய்கிறானே!

"ரவீந்திரன், இந்த அரை இருட்டில் ஒன்றும் சரியாகப் பார்க்க முடியவில்லை. வாருங்கள் திரும்பிப் போகலாம். முடிந்த மட்டும் சாதாரணம் போலக் காட்டிக் கொண்டு திரும்பிச் செல்ல முயன்றாள் சௌதாமினி.

இரண்டு எட்டில் அவளுக்கு முன்னே வந்து வழியை மறைத்தான் ரவீந்திரன். "இதோ பார், என்னை மீறி இங்கிருந்து நீ எங்கும் ஓடிவிட முடியாது. அதோடு நீ என்னதான் தொண்டை கிழியக் கத்தினாலும் உன் கூச்சலைக் கேட்டு எந்தக் காத்தவராயனும் வரமாட்டான். அதனால், என் பேச்சைக் கேட்டு நல்லதனமாய் என்னோடு சந்தோஷமாக இருப்பதா, மூரண்டு பிடித்து உடம்பைப் புண்ணாக்கிக் கொள்வதா, எது மேல் என்று நீயே தீர்மானித்துக் கொள்" என்றான் அதிகாரமாக.

"திரும்பவுமா?" என்றாள் அவள் கள்ளென்று மூண்ட எரிச்சல், மறையாத குரலில். "திருமணத்துக்கு முன் இதெல்லாம் பிடிக்கவில்லை என்று நான்தான் முன்பே சொல்லியிருக்கிறேனே!"

"எனக்குப் பிடித்திருக்கிறது என்று நானும் முன்பே சொல்லித்தான் இருக்கிறேன். நாளைக்குக் கணவன் ஆகப் போகிறவன் நான். ஒன்றுமே இல்லாமல் இருக்க நான் என்ன சாமியாரா, சன்னியாசியா? எப்படியும் இன்று நீ என்னை அனுசரித்துத்தான் ஆக வேண்டும்." என்றான் அவன் பிடிவாதக் குரலில்.

"என் பெற்றோர், உங்கள் பெற்றோர்.... நம் பெரியவர்கள் என்ன சொல்வார்கள் என்று யோசித்

துப் பாருங்கள்'' என்று நல்ல விதமாகவே சொல்லிப் பார்த்தாள் சௌதாமினி.

''நாம் சொன்னால்தானே அதற்கு மேல் அவர்கள் சொல்வதற்கு? நான் எதையும் சொல்லப் போவது இல்லை. நீயும்தான் வெட்கம் இல்லாமல் சொல்லிவிடு வாயா, என்ன?'' சரசக்குரலில் பேசியபடி அவளை நோக்கி முன்னேறினாள் அவன். ''இப்போது நேரத்தை வீணாக்காமல் வா''

''சீ! என்று திரும்பி ஓடத் தொடங்கினாள் அவள்.

''அட அப்படி எங்கேடி ஓடிவிடுவாய்? இன்றைக்கு நான் உன்னை விடப் ர.....ய்..... யார்..... யார்டா நீ...'' என்று அவனது குரல் நிஜமாகவும் ஓட்டத்தை நிறுத்தி, நின்று, திரும்பிப் பார்த்தாள் சௌதாமினி.

பார்த்த அளவில் அவளுக்கு திக்கென்றது.

யாரோ ஒருவன், ரவீந்திரனைப் பின்புறமாகப் பிடித்து அனாயாசமாய் அவனை நிறுத்திக் கொண்டிருந்தான்.

இருளில் முகம் சரியாகத் தெரியாத போதும், அவனிடமிருந்து விடுபட முடியாமல் ரவீந்திரன் திணறுவதிலிருந்து வந்தவன் பலசாலி என்பது தெரிந்தது. குறைந்த பட்சம் அடிதடியில் வல்லவன்.

ரவீந்திரனை அடித்துப் போட்டுவிட்டு இவளிடம் வந்தான் என்றால் சௌதாமினி அதோகதிதான்.

ரவீந்திரனுக்கு உதவ முடியுமா என்று யோசித்து, அதைவிட இப்போது மானம்தான் முக்கியம் என்று மீண்டும் திரும்பி ஓட அவள் காலெடுத்து வைத்த போது, ''யார்? நான்தான் காத்தவராயன்'' என்று புதியவன் கூறவும், அப்படியே நின்ற இடத்திலேயே தொய்ந்தாள் அவள்.

அப்பாடி! வந்துவிட்டான். இனிக் கவலையில்லை!

அவள் தரையில் சரிந்து அமர்வதைக் கண்டதும், ''சௌதாமினி,உனக்கு ஒன்றுமில்லையே'' என்று ரவீந்திரனை ஒதுக்கித் தள்ளிவிட்டு, அவளிடம் விரைந்தான் நீலகாந்தன்.

அவன் தள்ளிய வேகத்தில் கீழே விழுந்து சமாளித்து எழுந்த ரவீந்திரன், ''என்னடா பொறுக்கி, உன்னால் திரும்பத் திரும்ப எனக்கு ஒரே தொல்லை. ஒரு வழியாய் ஒழிந்து போ!'' என்ற ஆவேசத்துடன் அங்கே கீழே கிடந்த செங்கல் ஒன்றைத் தூக்கி நீலகாந்தன் மேல் வீசி எறிந்தான்.

அதைக் கவனித்து விட்டு, ''அய்யோ! வேண்டாம் என்று சௌதாமினியின் கதறலில் திரும்பிப் பார்த்த நீலகாந்தன் வேகமாக விலகிய போதும், அவன் தோளில் ஒரு புறமாய் அந்தக் கல் 'நட்'டென்று மோதிய சத்தம் நன்றாகவே கேட்டது.

ஒரு கணம் அடிபட்ட தோளைப் பற்றியவன், உடனேயே, ''உன்னை.....'' ஆத்திரத்துடன் முன்னேறி, ரவீந்திரனின் சென்னி ஓரமாய் ஒரு குத்து குத்தினான்.

அந்தக் குத்தில் ரவீந்திரன் உளர்வற்று விழுந்து விட கைகளைத் தூக்கி விட்டபடி, ''நீ வா சௌதாமினி,'' என்றான் நீலகாந்தன், ''முதலில் இங்கிருந்து கிளம்பலாம்'' என்று அவளை அழைத்தான்.

அதற்குள் அவன் அருகே வந்து விட்டிருந்த சௌதாமினி அதற்குமேல் செல்லத் தயங்கினாள்.

''என்ன''

''ரவீந்திரன்? அவருக்கு ஏதாவது அடிகிடி பட்டு விட்டதோ என்னவோ. அவரை இப்படியே விட்டு விட்டு எப்படிப் போவது?''

வேண்டுமானால் அவனுக்குத் துணையாயிரு என்று நீலகாந்தன் அவளையும் விட்டுவிட்டுப் போய் விடக்கூடாதே என்று சௌதாமினிக்கு உள்ளூர உதறல் தான்.

ஆனால் வேகமாக ஒரு கோபப் பெருமூச்சு விட்டபோதும், அவன், அப்படி ஒன்றும் அவளை விட்டு விட்டுப் போய்விடவில்லை. சிலகணங்கள் பேசாதிருந்து தன் சினத்தைக் கட்டுப்படுத்திக் கொண்டு, "அவளையா?" உன் அருமைக் குட்டிகவருக்கு அடி எதுவும் பட்டுவிடவில்லை. கம்மா சற்று நேரம் உணர்வு இராது. அவ்வளவுதான். இன்னும் கொஞ்ச நேரம் இப்படியே நீ தயங்கிக் கொண்டிருந்தால் இன்னொரு கல்லை என் மேல் விட்டெறிந்தாலும் எறிவான். அதில் என் மண்டை உடைந்தால், அப்புறம் நீ..." என்றவள் மேலே பேசி வாக்கியத்தை முடிக்கு முன் சௌதாமினி மடமடவென்று வெளியே வந்து அவனது காரிடம் சென்று நின்றாள்.

சற்று நேரம் பேசாமால் ஒட்டிய நீலகாந்தன், ஒருவாறு மனம் சமனப் பட்டாற்போல் சௌதாமினியிடம் பேச்சுக் கொடுத்தான். "உன்னுடைய இந்தத் திருமணம் காதல் மணமா?"

"இல்.. அதாவது... ஆமாம்... ஒருவகையில் அப்படித்தான்"

"அது என்ன வகை?"

"ரவீந்திரனுடைய குடும்பம் - அவர் உள்பட எல்லாமே என்னை ஒரு விழாவில் பார்த்தார்களாம். ரவீந்திரன் குடும்பமும் ஆசைப்படவே... பெற்றவர்கள் முறையாகத்தான் வந்து பெண் கேட்டார்கள். எங்களைவிட மேல்தட்டு என்பதால் அப்பா அம்மாவுக்கு ரொம்பவும் சந்தோஷம்...."

"உன் சம்மதம்?"

"வேண்டாம் என்று மறுக்கக் குறைகள் ஏதும் இல்லையே!"

மீண்டும் சற்று நேரம் மவுனத்தில் கழிந்தது. தூரத்தில் நகரத்தின் விளக்குகளின் ஒளி பளிச்சிடத் தொடங்கவும், "உன் வீட்டில் உன்னைக் கொண்டு விடுமுன் நீ எனக்கு ஒரு வாக்குறுதி தரவேண்டும், சௌதாமினி." என்று அமர்ந்த குரலில் உரைத்தான் நீலகாந்தன்.

"எ... என்னவென்ற?"

"ரவிந்திரனை மணப்பது இல்லை என்று!"

சௌதாமினி பிரமித்தாள்.

"என்ன பேச்சு இது?"

இருவீட்டாரும் ஒப்பி நடத்த இருக்கும் திருமணம், மண்டபத்துக்கு முள்ளங்கிப் பத்தையாகப் பத்தாயிரம் ரூபாய் கொடுத்திருக்கிறது. நகைகள், துணிமணிகள், வீட்டில் வெள்ளையடித்து - டிஸ்டம்பர் அடித்து வீடே விழாக்கோலம் கொண்டு இருக்கிறது. பத்திரிகை அடிக்க கொடுத்தாயிற்று. இப்போது போய் ரவீந்திரனை மணக்கக் கூடாதா?

இவனுக்கு என்ன ஆயிற்று? ரவீந்திரன் வீசிய கல் இவன் மேல் பட்டதில் 'தட்'டென்று சந்தம் கேட்டதே. ஒரு வேளை தலையில் அடிபட்டு விட்டதோ. ஆனால் இதுவரை ஒழுங்காகத் தானே பேசி வந்தான்?

தன் காதுகளின் மீதே ஐயம் கொண்டவளாக, "நீங்கள் என்ன சொன்னீர்கள்?" என்று கேட்டாள் அவள்.

"ரவீந்திரனோடு உன் திருமணம் நடக்கக் கூடாது என்றேன்" என்றான் அவன் அசையாமல்.

சட்டென மூண்ட சினத்துடன், "ரவீந்திரனோடு என் திருமணம் நடக்கக்கூடாது என்றால் வேறு

யாரோடு நடக்க வேண்டும் என்கிறீர்கள்? உங்க சோடா?" என்று துடுக்காகக் கேட்டாள் அவள்.

நோளைக் குலுக்கிவிட்டுப் பேசாமல் இருந்தாள் அவள்.

"இதற்கு என்ன அர்த்தம்?"

கரு கருவென்ற பொங்கிய கோபத்துடன், "ஆக, ஆபத்பாந்தவனாக, அவ்வப்போது வந்து நின்று தன் அடிப்படை சுயநலம் தான் என்று தெரிகிறது!" என்றாள் அவள் எகத்தாளமாக.

"வேண்டும் என்று சொல்கிறாய் என்பது உனக்கே தெரியும். ஆனால் ஒருவன் தன் நலத்தையும் கவனித்துக் கொள்வதில் என்ன தப்பு? சுய நலம் இல்லாமல் பரோபகாரமே உருவாய் இருக்க நான் ராமகிருஷ்ணரோ விவேகானந்தரோ என்று ஒரு போதும் சொல்லிக் கொண்டதில்லையே!" என்றான், நீலகாந்தன் அழுத்தத்துடன்.

மீண்டும் சற்று நேரம் மவுனத்தில் கழிய, இப் போது சௌதாமினி அதைக் கலைத்தாள். "சாரி" என்றாள் சின்னக் குரலில்.

அவள் பேசாமலே இருக்கவும், திருமணத்தை நிறுத்த முடியாமைக்கான காரணங்களை அதே சின்னக் குரலிலேயே அடுக்கினாள்.

"ஆனால் ரவீந்திரனின் நடத்தை? அது பரவா யில்லையா? திருமணம் என்றால் அங்கே இருவருக்கி டையே நம்பிக்கை, மரியாதை, மதிப்பு இருக்க வேண் டாமா? என்ன பேச்சு பேசுகிறான்? எப்படி நடந்து கொள்கிறான்?"

"நம்பிக்கை, மரியாதை எல்லாம், உண்டுதான். திருமணச் சேலை கூட என் விருப்பம் போலத்தான் வாங்கப் போகிறார்கள். ஆனால் என் மேல் அவருக்கு

ஆசை கொஞ்சம் அதிகம். அதனால் தான்... இப்படி..." என்றாள் சௌதாமினி. தாமின் பேச்சு நினைவில் வந்து அதுவே மெய்யென்றது.

"அப்படியானால் திருமணத்தை நிறுத்தப் போவது இல்லையா?"

"இதோ பாருங்கள், நீலகாந்தன், திருமணத் தையே நிறுத்தும்படி இப்போது என்ன ஆகிவிட்டது? அதோடு எத்தனை காரணங்கள் சொன்னேன்? தயவு செய்து இன்னொரு தரம் பேசாதீர்கள்." என்றாள் அவள் நயமாகவே.

"அதாவது திருமணத்தை நீயாக நிறுத்துவா டாய்?" என்று ஒருமாதிரி குரலில் நீலகாந்தன் கேட்ட போது, மெல்ல மெல்ல வேகம் குறைந்து கொண்டே வந்த கார் அடியோடு நின்றது.

"ஊகும்." என்றாள் அவள் கருக்கமாக.

"அப்படியானால் மற்றவர்களாகவே அதை நிறுத் தும் படிச் செய்ய வேண்டியதுதான்." என்றவன் ஒ அரை வட்டமடித்து காரை வந்த பாதையிலேயே திருப்பி வேகமாக ஓட்டத் தொடங்கினான்.

தூக்கி வாரிப் போட்டது! நீலகாந்தனைத் திரும் பிப் பார்த்தாள் சௌதாமினி.

5

சென்னை மாநகரத்தை நெருங்கிக் கொண்டி ருந்த கார் மீண்டும் விலகிச் செல்வதிற்தான் சௌதா மினி முதலில் திடுக்கிட்டது. அதன் பிறகே நீலகாந்த னின் வார்த்தைகளைக் கருத்தில் ஏற்றவள் அவற்றின் பொருள் புரியாமல் திகைத்துப் போனாள்.

"மற்றவர்களாக நிறுத்தும்படிச் செய்வதா? அப்படி யாரும் திருமணத்தை நிறுத்த மாட்டார்கள்." என்றாள் அவள்.

அவன் பேசாமல் காரை ஓட்டினான். கிளைப் பாதை ஒன்றில் கார் விரையவும் ஏனோ அவளது வயிற்றுக்குள் பட்டாம்பூச்சிகள் பறக்கத் தொடங்கின.... "எங்கள் வீடு அங்கே... சென்னையில் இருக்கிறது" என்றாள் சன்னக் குரலில்.

"தெரியும்" என்று கருக்கமாகப் பதில் வந்தது.

"பின்னே இங்கே ஏன் போகிறோம்?" என்றாள் அவள் கலக்கத்துடன்.

"திருமணத்தை மற்றவர்களாக நிறுத்தச் செய்வதற்காக"

அன்றைக்கு இரண்டாம் முறையாக மீண்டும் அவளால் தன் காதுகளை நம்ப முடியவில்லை.

வெளியே பார்த்தால் என்ன இடம் எது என்று ஒன்றுமே புரியவில்லை.

கரு கருவென்று நன்றாகச் சூழ்ந்துவிட்ட இருள். அவளுடைய வீட்டினரை விட்டு மேலும் மேலும் விலகித் தூரமாய்ப் போகிற நிலை. அவளிடம் அவனுக்கு ஈடுபாடு உண்டென்று நீலகாந்தன் ஒப்புக் கொண்டது. இப்போது திருமணத்தை மற்றவர்களாகவே நிறுத்தும்படி செய்வேன் என்றது எல்லாமாகச் சேர்ந்து கூட்டிப் பார்த்ததில் சௌதாமினியால் ஒரே ஒரு முடிவுக்குத்தான் வரமுடிந்தது.

ஒரு கணம் திகிலில் உடல் நடுங்கியவளுக்கு உடனேயே நெஞ்சு கொதித்தது. அவளை அவன் என்னவென்று எண்ணிக் கொண்டான்? ரவீந்திரனுக்காவது மணக்கப் போகிறவன் என்கிற உரிமையாவது இருந்தது!

"பாட் காலிங் த கெட்டில் பிளாக்' என்பது போல ரவீந்திரனைப் பற்றி பெரிதாகச் சொல்லிக்கொள்ள போது உங்கள் பற்றி எப்படி போகிறதாம்? எல்லாம் ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள்!" என்றாள் நிதமிழ்ந்திய ஆத்திரத்துடன்.

"எப்படிச் சொல்கிறாய்?" என்றான் அவன் ஒரு மாதிரிக் குரலில்.

"பின் என்ன? சென்னையை விட்டு விலகிச் செல்லுகிறீர்கள். தனிமையான பாதை. மற்றவர்களாகத் திருமணத்தை நிறுத்தும்படிச் செய்வேன் என்கிறீர்கள். இதற்குப் பிறகு கூட உங்கள் எண்ணத்தை ஊகிக்க முடியாத முட்டாளா நான்?"

"இல்லை. நிச்சயமாக அப்படிப்பட்ட முட்டாளாக நான் உன்னை எண்ணவில்லை. ஒரு ரவீந்திரனின் பழக்கத்தில் மற்ற ஆண்கள் அத்தனை பேரையும் தவறாக மதிப்பிடும் முட்டாள் என்று மட்டும்தான் நினைக்கிறேன்." என்றான் அவன் சற்றே ஏளனமாக.

"நான் முட்டாளா? கல்லூரியில் 'ராங்க்' வாங்கிய நானா முட்டாள்? ஆமாம் முட்டாள்தான். உங்களை நம்பி உங்கள் காரில் ஏறினேன் இல்லையா? நிச்சயமாக நான் முட்டாளே தான். நீலகாந்தன், முதலில் காரைச் சென்னைக்கு திருப்பி ஓட்டுங்கள் இல்லாவிட்டால்...."

"இல்லாவிட்டால்?"

"கார்க்கதவைத் திறந்து கொண்டு குதித்துவிடுவேன்."

"குதித்து? குதித்து, சென்னை வரை போடி நடையாகவே போய்விடுவதாக உத்தேசமா? இந்த இருட்டில் அதுவும் தனியாக? ஒழுங்காக வீடுபோய்ச் சேரும் எண்ணம் இல்லை போலிருக்கிது. இன்னும்

ஒன்று குதிக்கும் போது கால் ஒடிந்து விட்டால் வேறும் பொடி நடைகூட முடியாததாகிவிடும்!''

நீலகாந்தன் தன்னைப் பார்த்து எள்ளி நகைக்கி றான் என்பது சௌதாமினிக்குப் புரிந்தது. ஏன் மாட் டான்? ஏதோ கொஞ்சம் இசை பிசகாக நடந்து கொண்டானும் கவுரவமாய்த் திருமணம் செய்து கொள்ள இருந்தவனை விட்டு விட்டு, இவன் கைக் குள் அவளாகவே வந்து மாட்டிக் கொண்டு இருக்கி றாளே! அரசனை நம்பிப் புருஷனை... என்பது இதைப் போலத்தான் இருக்குமோ?

ஆனால் இப்போது இவனிடம் ஆத்திரப்பட்டுப் பேசிப் பயன் இல்லை. உள்ளே பதைக்கும் மனதை முடிந்த மட்டும் அடக்கிக் கொண்டு சௌதாமினி வேகமாக யோசித்தாள். பிறகு சற்று அமைதியான குரலை முயன்று வருவித்துக் கொண்டு பேசினாள்.

''பாருங்கள் நீலகாந்தன், நான் நீங்கள் நினைக் கிற மாதிரிப் பெண் அல்ல. நீங்கள் பெரிய பலசாலி யாக இருக்கலாம். ஏதோ கதைகளில், சினிமாப் படங்களில் இந்த.... மாதிரி வலிமை காட்டுவதில் பெண்கள் அந்த ஆளிடமே மயங்கி விடுவதாகக் காட்டுவதைப் பார்த்து விட்டு அது போலச் செய்ய லாம் என்று எண்ணுகிறீர்களோ என்னவோ? ஆனால் நான்... நான் அப்படிப்பட்டவள் இல்லை. மனக்கப் போகிற ரவீந்திரனோடு கூட இது எனக்கு நினைக்கக் கூடச் சகிக்க முடியாதது. அதனால் இ... இதற்காக உங்களை நான் வாழ்நாளெல்லாம் வெறுக்கத்தான் நேரிடும்.'' என்று ஒருவாறு கூறிமுடித்தாள்.

சிரமப்பட்டுப் பேசி முடித்துவிட்டு, இதன் பிறகே னும் நல்ல புத்தி வந்து அவளை வீட்டுக்கு அழைத்துச் செல்வானா என்று ஏக்கத்துடன் காத்திருந்தவளுக்கு ஏமாற்றம்தான் கிட்டியது.

அவளது கவலையைப் பற்றிய அக்கறையே இல்லாமல், குரலில் சிறு நகையுடன், தமிழ் இலக்கணத் தில் ''இடக்கரடக்கல் என்று ஒரு பகுதி உண்டு. சற்று அசிங்கமான விஷயங்களை, வேறு சொற்கள் கொண்டு குறிப்பால் உணர்த்துவது. இப்போது நீ அப்படி ஏதோ சொல்லியிருக்கிறாய் என்கிற அளவு புரிகிறது. ஆனால் என்ன யோசித்தும் உனுடைய 'இது மாதிரி' 'இதற்காக' என்பதற்கெல்லாம் எனக்குப் பொருள் விளங்கவே இல்லை. நயவு பண்ணி, அந்த வார்த்தைகளை எதற்காகப் பயன்படுத்தினாய் என்று எனக்குக் கொஞ்சம் வெளிப்படையாகவே சொல்லு கிறாயா?'' என்று கேட்டான் நீலகாந்தன்.

அந்த இருளில் அது பயனற்றது என்பது தெரி யும். ஆத்திரத்துடன் திரும்பி அவனைப் பார்த்து முறைத்தாள் சௌதாமினி. இவனுக்கா தெரியாது? பகத்தோல் போர்த்திய புலி. பொல்லாத ராட்சஸன். இவனிடம் போய் மாட்டிக் கொண்டாளே! ''இப்போது காரை நிறுத்தப் போகிறீர்களா இல்லையா?'' என்று சீறியவள், சட்டென உடைந்து விசும்பினாள்.

கார் மெல்ல நின்றது.

அப்போதும் இறங்கி எங்கும் ஓட முயற்சிக்க வில்லை அவள். என்ன பயன்? வழியறியாத இந்த இருளில் எங்கென்று ஓடுவது? அவனுக்கு வேறு இது பழக்கப்பட்ட இடமாகத் தெரிகிறது! ஓடினால் பிடித்து விடுவான்! அத்தோடு எந்த முயற்சி செய்யவும் மனதிலோ உடம்பிலோ தெம்பு இருப்பதாகவும் தெரி யவில்லை.

அச்சமும் கவலையுமாக எழும்பிய விசும்பல் களை வாய் பொத்தி அடக்க முயன்று கொண்டு இருந்தவள் பக்கம் திரும்பினான் நீலகாந்தன். ''இந்த அழுகைக்கு இறங்கி உன்னை இப்போதே திருப்பிக்

கொண்டு போய் விட்டேன் என்றால் நீ வாழ்நாளெல் லாம் அழும்படியாக ஆகிவிடக்கூடாதே என்ற கவ லைதான் எனக்கு... பொறு இவ்வளவு நேரம் நீ பேசியதை நான் கேட்டேன் அல்லவா? இப்போது நான் சொல்லப் போவதை நீயும் சற்று அமைதியுட னேயே கவனி. முதலாவதாக, நீ அஞ்சிக் கலங்கி, எதிர்பார்ப்பது போல நான் உன்னை அழைத்துப் போகும் இடத்தில், நீ விரும்பாதது எதுவும் நடக்கப் போவது இல்லை. இது சத்தியம். ஒரு பெண்ணைப் பலத்தால் பணியவைக்கும் பேடி நானல்ல, நம்பு.

"மற்றவர்களாகத் திருமணத்தை நிறுத்தும்படி செய்வது என்றால் உன்னைச் சேதப்படுத்திதான் அதைச் செய்யவேண்டும் என்று இல்லை...."

இருளில் சாத்தியமில்லை என்று தெரிந்தபோ தும், திகைப்புற்று அவன் முகத்தைப் பார்க்க முயன் றாள் சௌதாமினி.

அவளது அசைவிலிருந்து, அவளது மனதை ஊகித்தவன் போலக் காரின் உள்விளக்கைப் போட் டான் நீலகாந்தன்.

அவள் புறமாகத் திரும்பி, "நான் உன்னை நாசப்படுத்துவேனா, சது?" என்று மெல்லிய குரலில் வினவினான்.

பேசமாட்டாமல் தலையசைத்தவளின் விழிகளில் மீண்டும் நீர் கோர்த்தது.

தன் பையிலிருந்த கைக்குட்டையை எடுத்து, அவள் முகத்தை மிருதுவாகத் துடைத்துவிட்டான் அவன்.

அப்படியே அவன் தோளில் ஆறுதலாகச் சாய்ந்து கொள்ள வேண்டும் போலத் தோன்றிய

உந்துதலை அடக்க முயற்சிக்கையில் இன்னொன்று நினைவு வரவும் அவசரமாக அவனது தோளை உற்றுப் பார்த்தாள். "அந்தக்கல் மோதிய சத்தம் நன்றாகக் கேட்டதே. வலிக்கிறதா? உள்ளே ஏதும் அடிபட்டிருக்கிறதோ என்னவோ? பார்த்தீர்களா?" என்று கவலையுடன் கேட்டாள்.

சட்டென்று நீலகாந்தனின் விழிகள் பளிச்சிட்டன. "எனக்கு அடிபட்டால் நீ வருத்தப்படுவாயா, சது?" என்று மென்குரலில் வினவினான்.

ஆமாம் என்று கூடச் சேர்ந்து உருகத் தோன்றவும் அவள் திடுக்கிட்டுப் போனாள். இவனிடம் பேச்சுக் கொடுப்பதே தப்பு. எதையும் எப்படியோ அவனுக்குச் சாதகமாக்கி விடுகிறான்! முகத்தை திருப்பி, வெளியே பார்த்தபடி, "உங்கள் திட்டம் பற்றி ஒன்றும் கூறவில் லையே. இப்போது என்ன செய்யப் போகிறீர்கள்" என்றாள்.

அவள் முகத்தில் குழப்பம் பரவவும், "இது எங்கள் பண்ணை, சௌதாமினி, என் தந்தை உருவாக் கியது. இங்கே உன்னை மூன்று தினங்கள் தங்க வைக்கப் போகிறேன்," என்றவன் அவளது பார்வை யில் ஐயம் தோன்றவும் "கவலை வேண்டாம். உன் மேல் என் விரல்கூடப் படாது. உத்திரவாதம். இந்த மூன்று நாட்களும் நான் இங்கே இருக்கப் போவது இல்லை. சொல்லப் போனால் இப்போது உன்னைக் கொண்டுபோய் விட்டுவிட்டு, உனக்குத் தேவையான ஏற்பாடுகளைச் செய்து விட்டு, இரவுக்கிரவே திரும் பிச் சென்றுவிடப் போகிறேன். ஆனால் இந்தமூன்று நாட்களுக்குப் பிறகு நீ வீடு செல்லும் போது மற்றவர் களாகவே - ரவீந்திரனும் கூட திருமணத்தை நிறுத்தி விடுவான்," என்றான் நீலகாந்தன்.

அவனது எண்ணத்தைப் புரிந்து கொண்டவளின் முகம் சிவந்தது. ஆனாலும் விடாமல் ''அதாவது, இந்த மூன்று நாட்களில் நான் கெடுக்கப்பட்டிருப்பேன் என்று முடிவு செய்துவிடுவார்கள் என்கிறீர்கள்!'' என்று கேட்டாள்.

''ஆமாம்''

''அப்படி எடுக்கப்பட்ட முடிவின் அடிப்படையில் திருமணத்தை நிறுத்தி விடுவார்கள் என்கிறீர்கள்?''

''ஆமாம், நிச்சயமாக.''

அவள் சிரித்தாள். ''உங்கள் திட்டத்தில் ஒரு பெரிய ஓட்டை இருக்கிறதே, தெரியவில்லையா?''

''என்னது?'' என்று புருவம் சுருக்கினான் அவன்.

''நான்! நான்தான் அங்கே போனதும் எல்லோரிடமும் உண்மையைச் சொல்லிவிடுவேனே!''

''உன் உண்மையை யாரும் நம்ப மாட்டார்கள்'' என்றாள் அவள் அசட்டையாக.

''நான் சொன்னால் நம்புவார்கள்''

அவளையே நேராகப் பார்த்து, ''நம்பாவிட்டால்?'' என்று கேட்டான் நீலகாந்தன்.

''அந்த பிரச்சினைக்கே இடம் கிடையாது. நான் ஒன்று சொன்னேன் என்றால் அதை எல்லோரும் நம்பியே தீருவார்கள். ரவீந்திரன் உட்பட'' என்றாள் அவள் உறுதியோடு. ''அவ்வளவு என்ன? எங்கள் வீட்டு வேலைக்காரி கூட என் சொல்லை அப்படியே நம்புவாளே?''

''ஓகே, இதை ஒரு சவாலாக எடுத்துக் கொள்ளுவோம். உனி பேச்சை நம்பி, திருமணத்தை ஏற்கனவே திட்டமிட்டபடி நடத்தினால் செய்து கொள். அதன் பிறகு உன் வாழ்வில் நான் தலையிடமாட்டேன். இது

உறுதி. ஆனால், அங்கே உன் மேல் நம்பிக்கை இல்லை என்றால் நான் ஒருவன் இருப்பதை நீ மறந்துவிடக் கூடாது.

வியந்து நோக்கி விட்டு, ''அதாவது.....?'' என்று விளக்கம் கேட்டாள் அவள். விஷயம் புரியவில்லை என்று இல்லை. ஆனால் புரிந்ததை நம்புவதுதான் அவளுக்குச் சற்று கடினமாயிருந்தது. என்னதான் அவளிடம் ஒரு லயிப்பு இருந்தாலும் கூட இவ்வளவு தூரம் போனானா என்ன?

ஆனால் சற்றும் தயங்கவில்லை நீலகாந்தன். ''என்னிடம் நீ திரும்பி வந்து விட வேண்டும்.'' என்றான் தெளிவாக.

''அதற்கு வாய்ப்பிருக்காது'' என்றாள் அவள் அமைதியாக.

''வாய்ப்பு இருந்தால்?'' என்றான் அவன் விடாமல்.

சௌதாமினி பேசாதிருக்கவும், ''நெருப்பு என்னால் வாய் வெந்து விடாது சௌதாமினி. உன்னவர்களிடம் உனக்கு அவ்வளவு உறுதியிருந்தால் சவாலை ஏற்றுக் கொள்வதில் என்ன தயக்கம்? உனக்கு அவர்களிடம் நம்பிக்கை இல்லை, வாக்குறுதி கொடுக்கப் பயப்படுகிறாய்; தயங்குகிறாய்?'' என்று சீண்டினான் நீலகாந்தன்.

நிமிர்ந்த தலையைச் சிலுப்பினாள் சௌதாமினி. ''வருகிறேன்'' என்றாள் தெளிவாக.

6

அதற்குமேல் சௌதாமினி எதிர்பாராதது எதுவும் நடக்கவில்லை. நீலகாந்தனும் சொன்ன பேச்சை மாறவில்லை.

அவனது காரின் 'ஹார்ன்' ஒலி கேட்டதுமே, யாரோ ஓடி வந்து கேட்டைத் திறந்தார்கள்.

அதன் பிறகும் பல நிமிடங்கள் சென்ற பின்னரே அந்தப் பண்ணை வீடு கண்ணில் பட, கார் வீட்டின் முன் சென்று நின்றது.

வந்து குழுமிய வேலையாட்களின் முகத்தில் வியப்பான ரேகையைக் காணவும் சௌதாமினிக்கு ஒரு மாதிரி இருந்தது. இவர்கள் எல்லோரும் என்ன நினைக்கக்கூடும்? ஒரு கணம் குன்றியபோதும், உடனேயே, அவளைப் பற்றி அறியாத, அவளது வாழ்வோடு எந்தவிதத் தொடர்பும் இல்லாத இவர்களது எண்ணங்களைப் பற்றிக் கவலைப்படுவது மதியீனம் என்று எண்ணி நிமிர்ந்தாள்.

அவளை ஹாலில் அமரச் செய்து விட்டு, நீலகாந்தன் வீட்டின் உள்ளே சென்றான்.

வீட்டில் கிராமிய மணம் கமழ்ந்தாலும் எல்லா விதவசதிகளும் இருப்பதை சௌதாமினி கண்டாள்.

சற்று நேரத்தில் திரும்பி வந்த நீலகாந்தன் சௌதாமினியை மாடியில் ஓர் அறைக்கு அழைத்துச் சென்றான்.

எளிமையாக, ஆனால் கீழேயிருந்த ஹாலைப் போலவே வசதியாகவே இருந்தது அறை. ஆனால் ஒரு பெண்ணின் அறை.

கண்களில் கேள்வியுடன் அவள் அவனைப் பார்க்கவும், "என் தாயாரின் அறை. என் அறையில் தங்க உனக்குப் பிடிக்காதோ என்று இங்கே அழைத்து வந்தேன். உனக்கு மாற்று உடை வேண்டுமானால் அந்த அலமாரியைத் திறந்து அம்மாவினுடையது எதையாவது எடுத்துக் கட்டிக் கொள். ஆனால்.... சாரி சௌதாமினி, இங்கே வெறும் சேலைகள் மட்டும்தான்

கிடைக்கக் கூடுமே தவிர, மற்ற..." என்று நோளைக் குலுக்கினான் அவன்.

அவனது குறிப்பைக் கவனியாதவள் போல, "உங்கள் அம்மாவுடையதை அவர்கள் அனுமதியில்லாமல் நான் பாட்டில் எடுத்துப் பயன்படுத்தினால் அவர்களுக்கு ஆத்திரம் வராதா?" என்று பேச்சுக் கொடுத்தாள் சௌதாமினி.

"வராது என்பது என் அபிப்பிராயம். அதற்கு மேல் அவர்களது அனுமதி பெற வழியில்லை. அம்மா அப்பா இருவரும் வெளிநாடு போயிருக்கிறார்கள். அதனால் என் அனுமதியே போதும் என்று கொள்" என்றான் அவன்.

ஒரு விதக் குறுகுறுப்புடன் நோக்கி, "அவர்கள் இங்கே இருந்திருந்தால் என்னை இங்கே அழைத்து வந்திருப்பீர்களா?" என்று கேட்டாள் சௌதாமினி.

"வேறு.... எங்கேயாவது தானே... அவர்களுக்கு மறைத்து..."

பெற்றவரிடம் மறைத்துச் செய்யும் செயல் சரியானதாக இராது என்பதை உணர்ந்த விரும்பி அவள் சொன்னாள்.

ஆனால், "என் அம்மாவைப் பற்றி உனக்குத் தெரியாது." என்றான் அவன். "உன்னை வேறு எங்கும் அழைத்துப் போயிருக்கவும் மாட்டேன். அத்தோடு இந்த இரவில் நான் திரும்பிச் செல்லும் அவசியமும் நேர்ந்திராது. நடந்ததைச் சொல்லிவிட்டுப் பொறுப்பை அவர்களிடம் ஒப்படைத்து விட்டு நிம்மதியாக இருந்திருப்பேன்."

"பொறுப்பா? என்ன பொறுப்பு? என் பொறுப்பா?"

"உன் திருமணத்தை நிறுத்துகிற பொறுப்பைச் சொன்னேன். எல்லாம் அறிந்தால் அந்த ரவீந்திரனை

நீ மணப்பதை எப்படியும் தடுத்து நிறுத்தி விடுவார்கள். உன் பெற்றோரிடமே இப்படி ஒரு மாப்பிள்ளையைப் பார்த்தீர்களே என்று சண்டைக்குக் கிளம்பிவிடுவார்களாக்கும்?''

''ஆனால் என் பெற்றோர்....'' என்று அவள் தொடங்குமுன் யாரோ கதவில் லேசாகத் தட்டினார்கள்.

அதற்குள்ளாக நீலகாந்தன் ஏறிட்டுப் பார்க்கவும், ''பலகாரம் தயார்னு தவக சொல்லச் சொன்னார் சின்னய்யா'' என்றான் ஒருவன் பணிவுடன். என்ன உணவு தயாரிக்க முடியும் என்று நினைத்தபடி வந்தவளுக்கு மணக்க மணக்க ரவை உப்புமாவும் தேங்காய் சட்டினியும் காத்திருந்தன.

''சட்டினியா, சர்க்கரையா?'' என்று இரண்டையும் கிண்ணங்களில் கொண்டு வைத்து உபசரித்தார்கள்.

உணவு முடிந்ததும் வீட்டோடு இருக்கும் பணியாளர்களை அழைத்து அவளுக்கு அறிமுகப் படுத்தி வைத்தான். அவர்களை அனுப்பிவிட்டு, ''நீ இந்த எல்லைக்குள் இருக்கும்வரை நீ ஏவுவது எல்லாம் நடக்கும். ஆனால் இங்கிருந்து வெளியேற முயன்றால்.... உன் மரியாதையைக் கெடுத்துக் கொள்ள மாட்டாய் என்று நம்பலாம் இல்லையா?'' என்று கேட்டான்.

தலையைச் சரித்து அவனைப் பார்த்தாள் சௌதாமினி. ''யார் யாருக்கோ என் மேல் நம்பிக்கை இராது என்கிறீர்களே, இப்போது நீங்கள் நம்பவில்லையே!'' என்றாள் கிண்டலாக.

''நீ, நீயாக இருக்கையில் நம்புவேன், ஆனால் யார் யாருக்கோ விசுவாசமாய் இருப்பதுதான் கடமை

என்று குழம்பத் தொடங்கிவிட்டால் உன்னையேயே உன்னை நம்ப முடியாதே''

''இல்லை இல்லை நம்பலாம்.'' என்று முறுவலித்தவள், சற்று முகம் மாறி, ''ஆனால்....'' என்று இழுத்தாள்.

''ஆனால் என்ன?''

''என் பெற்றோர்? நான் என்ன ஆனேனோ என்று தவித்துப் போய்விடுவார்களே! என் கதி பற்றி அவர்களுக்குத் தெரியப்படுத்த வேண்டுமே!''

ஒரு விநாடி சிந்தித்து விட்டு, ''உன் நலனைப் பற்றி என் குரல் கூறினால் அவர்களால் ஒத்துக் கொள்ள முடியாது. அதனால் நீயே சொல்லு. இங்கேயே டெலி:போன் இருக்கிறது. ஆனால் ஒன்று நலம் தெரிவிக்கலாம். அதற்கு மேல், மூன்று தினங்களில் திரும்பி வருவதாக மட்டும்தான் சொல்ல வேண்டும்... வேறு எதுவும் பேசக்கூடாது. சம்மதமா?'' என்று அவன் கேட்கவும் ''சரி''யென்று ஒத்துக் கொண்டாள் அவள்.

அழுவல் அறை போலத் தோன்றிய ஓர் அறைக்குள் அவளை அழைத்துச் சென்றான்.

டெலி:போனின் 'லாக்'கைத் திறந்து அவளிடம் ரிசீவரைக் கொடுத்தான்.

பக்கத்து வீட்டில்தான் டெலி:போன் இருந்தது. அவள் வீட்டில் கிடையாது. ஒரு டெலி:போன் கூட இல்லாத வீடு என்று அந்தப் பெண் ராணி முதல் நாளன்று தெளிவாக முணுமுணுத்தது அனாவசியமாக நினைவு வந்தது. பக்கத்து வீட்டுப் பெண்ணைக் கூப்பிடும்போது நீலகாந்தனும் அதையே சொல்லுவானா? சேச்சே, மாட்டான். இவன் அப்படிப்பட்டவன் அல்ல.

டெலிபோனுக்கு வருவது தந்தையாக இருக்க வேண்டும் என்ற அவள் விரும்பியது நடக்கவில்லை.

அவரானால் அதிகம் துளைத்து எடுக்காமல் பெரும்பாலும் சொல்வதை ஒத்துக் கொண்டு விடுவார் என்பதினாலேயே சௌதாமினி தந்தையிடம் பேசுவது மேல் என்று நினைத்தாள்.

ஆனால் கேட்டது தாயின் குரல். ஒரு பெருமூச்சுடன், குரலில் இனிமையைப் பூசி, ''அம்மா, நான் சது பேசுகிறேன்'' என்றாள்.

மேலே விரைவாகப் பேசி முடித்துவிட முயன்ற வளைத் தடுத்துக் குறுக்கிட்டுப் பேசினாள் சாரதா.

''சதுவா! என்னடி எங்கிருந்து பேசுகிறாய்? மணி என்ன ஆகிறது. தெரியுமா? ஒன்பது. துணிக்கடைக்குப் போன பெண்ணுக்கு வீடு வர இவ்வளவு நேரமா? நாலுபேர் என்ன சொல்வார்கள். என்கிற அறிவு வேண்டாம்? திருமணத்துக்கு முன்பாகவே மாப்பிள்ளையோடு இரவு பகல் பாராமல் சுற்றினாள் என்று பேசமாட்டார்களா? நான் உன்னை அந்த மாதிரியா வளர்த்தேன்? மரியாதையாக உடனே வீடு வந்து சேர்''

சாரதா மூச்செடுக்க நிறுத்திய இடைவெளியில் அவசரமாக, ''அம்மா, அம்மா ப்ளீஸ், நான் சொல்வதைக் கொஞ்சம் குறுக்கிடாமல் கேளுங்கள் அம்மா. இப்போது நான்... வந்து, எனக்கு எந்தவித ஆபத்தும் இல்லை. ஆனால் நான் திரும்பி வீடு வந்து சேர இன்னும் மூன்று நாள் ஆகும். கவலைப்படாதீர்கள்,'' என்றவள், ''என்னது...'' என்று உரத்த குரலில் தொடங்கிய தாயின் பேச்சை மேலே கேளாமல் ரிசீவரை வைத்து விட்டாள்.

ஆனால் மனம் தடுமாறியது. சில மணி நேரத்தாமதத்துக்கே இந்தப் பாடுபடும் தாயார் மூன்று நாட்கள் என்னமாய்த் தவிப்பாள்? படிக்கும் போது

வழக்கமாய் வரும் நேரத்துக்குப் பத்து நிமிடம் தாமதம் ஆனால் கூட வாசலிலேயே நிற்பவள்! ஆனால் இந்தச் சமயம் மன்னனுக்கு இது எங்கே புரியப் போகிறது?

'என்ன' என்பது போல ஒற்றைப் புருவத்தை உயர்த்தியவனை உறுத்து விழித்துவிட்டு முகத்தைத் திருப்பிக் கொண்டாள் அவள்.

மீண்டும் டெலிபோனை பூட்டி வைத்துவிட்டு அவளிடம் திரும்பினான் நீலகாந்தன். ''இந்தச் சாவி இங்கேயேதான். மேல் பார்வை பார்க்கிறவனிடம் இருக்கும். மேல் பார்வை பார்க்கிற சந்தர்த்திடம். ஆனால் அவன் என்னைக் கேளாமல் சாவியை யாரிடமும் கொடுக்க மாட்டான். என்னிடம் அவன் கேட்டு நான் மறுத்தும் அதை அவன் உன்னிடம் சொல்லும்படியான, மதிப்பு குறைவான நிலையை ஏற்படுத்த வேண்டாம். மற்றவர்களிடம் அப்படியே மதிப்பு மரியாதையைக் காப்பாற்றிக் கொள்... சௌதாமினி. இது உன் நன்மைக்காகவும் நான். இப்போது நான் கிளம்புகிறேன்.''

கீழே இறங்கிச் சென்று, அவனுடைய பணியாட்களிடம் ஏதோ பணித்துவிட்டு, சில நிமிடங்களுக்குள் கிளம்பிச் சென்றுவிட்டான்.

காரின் பின்புற விளக்கின் ஒளி மறையும் வரை பார்த்துக் கொண்டே நின்றாள் சௌதாமினி.

ஏனோ அவன் முன்னிலையில் தோன்றாத அச்சங்கள் எல்லாம் இப்போது தலை தூக்கிப் பேயாட்டம் ஆடத் தொடங்கின.

நீலகாந்தன் நிஜமாகவே போகிறானா, அல்லது போவது போலப் போக்குக் காட்டி விட்டுத் திரும்பி வந்துவிடுவானா? இரவில் அவள் அயர்ந்து உறங்கும் போது வம்பு செய்வானா? ஒரு வேளை சப்பிட்ட உப்புமாவில் ஏதாவது மயக்கமருந்து கலந்திருப்பார்

களோ? அவள் உணர்விழந்து கிடக்கையில் ஏதேனும் அவள் கோலம்... சேசே... அப்படியெல்லாம் இராது. தப்பாக நடக்க என்னுகிறவன் இப்போது விட்டுப் போக வேண்டியதே இல்லையே என்று மனதைத் திடப்படுத்திக் கொண்டபோதும். ஒடிப்போய் அறை யின் உள்தாள்ப்பாள்களை எல்லாம் அழுந்த மாட்டி வைத்து விட்ட பிறகு சற்று நிம்மதியோடு அவளால் உட்கார முடிந்தது.

இரவு படுத்தால் வெகுநேரம் உறக்கம் வர வில்லை. தாயை நினைக்கையில் கொஞ்சம் பயமாய் இருந்தது. திரும்பிச் சென்றதும் பயங்கரமாய் டோஸ் விடுவார்கள். வீட்டுப் பெண் வெளித்தங்குவதா என்று ஒரு மூச்ச புராணம் படிப்பார்கள். சவால் விஷயம் பற்றி அவள் சொல்லும்போது முதலில் காது கொடுத் துக் கேட்பது கூட சந்தேகம்தான். கேட்டபிறகும், இப்படி ஒரு சவாலை நீ எப்படி ஏற்கலாம் என்று அதற்கும் 'டோஸ்' வாங்கிக் கட்டிக் கொள்ளத் நான் நேரும்... அப்பா...

'கரெக்ட் பாப்பா. நீ செய்தது' என்று நான் சொல்லுவார். அப்படித்தான் நன்றாக அவன் மூஞ்சி யில் கரி பூச வேண்டும் என்பார்.

ரவீந்திரன் பற்றியோ கேட்கவே வேண்டாம். 'பத்து கடாந்தடியர்கள் மத்தியில் பத்துநாள் தனியாக இருக்க நேர்ந்தாலும் கற்பு கெடாமல் திரும்பிவிடு வாள்.' என்று சொல்லுகிறவன். நளாயினி சாவித்திரி போலக் கற்பு காக்கிறாள் என்று எரிச்சல் படுகிறவன். அவளிடம் ஐயம் கொள்வானா? வாய்ப்பே கிடை யாது.

திருமண அழைப்பை நீலகாந்தனுக்குக் கட்டா யம் கொடுக்க வேண்டும்.அவன் அசடு வழியும் போது. இனி மேலாவது இப்படி அடுத்தவர் வாழ்வில் மூக்கை நுழைக்காதீர்கள் என்று புத்தி புகட்ட வேண் டும்.

அவன் மனதுபற்றி அவன் குறிப்பு காட்டியது நினைவு வந்தது. வேறு ஒருவனோடு திருமணம் என்கையில் வருந்தப்படுவானே என்று உள்ளூர வேத னையாக இருந்தது. பாவம். என்று அவன் மேல் பரிதாபப் பட்டபடியே உறங்கிப் போனாள் சௌதா மினி.

மறுநாள் கண்விழித்ததும் பழைய பயங்கள் மீண் டும் திரும்பின. பல் துலக்கி விட்டு அமர்ந்தவளுக்குக் கீழே சென்று ஒரு காபி அருந்தக் கூட பயம் வந்தது.

காலைக் காபிக்கு உடனும் மனமும் ஏங்கிய போதும் பிடிவாதமாயக் கையைக் கட்டிக் கொண்டு அமர்ந்திருந்தாள்.

கதவை யாரோ மரியாதையுடன் தட்டினார்கள். நயக்கத்துடன் மெல்லத் திறந்த போது. கையில் ஒரு பாலிதீன் பையுடன் வேலைக்காரச் சிறுமி நின்று ருந்தாள்.

உள்ளே வந்து கட்டிலில் பையை வைத்து விட்டு, "உங்க டிரஸ்மா.. போட்டுக்குவீங்களாம்?" பல்லினைக் கியாச்சா? காபி அனுப்பவான்னு தலக - எங்கப்பாரு கேட்கச் சொன்னாரும்மா." என்று கறுப்பு மணிக்கண் களை அகல விரித்து அவளையே பார்த்தாள்.

சௌதாமினிக்குச் சட்டென ஓர் ஐடியா தோன்றி யது. "உன் பெயர் என்ன?" என்று வேலைக்காரச் சிறுமியை விசாரித்தாள்."

"கண்ணம்மாங்கோ..." என்று நாணிக் கோணி னாள் அவள்.

"அழகான பெயர். உன்னைப் போலவே" என்று கூசாமல் ஐஸ் வைத்தாள் சௌதாமினி.

பெண்ணும் பெயரும் மெய்யாகவே அழகுதான். அவள் ஒன்றும் முழுக்கப் பொய் சொல்லி விட வில்லை என்று மனதைச் சமாதானம் செய்து

கொண்டு, ''பார் கண்ணம்மா, எனக்குந் தனியாக எதையும் சாப்பிடப் பழக்கம் கிடையாது. உன்னை வேற எனக்கு மிகவும் பிடித்திருக்கிறதா? அதனால்

எப்போதும், நீ என் கூடச் சேர்ந்து சாப்பிட்டால் தான் நான் இங்கே சாப்பிடுவேனாக்கும்! காபி கூட அப்படித்தான்!''

அவள் அஞ்சலது போல, உணவில் ஏதாவது மயக்க மருந்து கலப்பதானாலும் பெற்ற பெண்ணையும் பாதிக்கும் என்று அந்தச் சமையல் காரர் தயங்கிவிடுவார் அல்லவா? சின்ன ஆறுதல்தான். அப்படி உணர்விழக்கச் செய்ய வேண்டும் என்றால் எந்த னையோ வழிகள் உண்டுதான். ஏன், ரவீந்திரனை மயக்கமடையச் செய்யவில்லையா? ஆனால் ஒன்று. அவளால் நிம்மதியோடு சாப்பிட முடியும்.

உணவுக்கு ஒரு வழி செய்த பின்னரே அவள் கொண்டு வந்த பாலிதீன் பையின் பக்கம் கவனத்தைச் செலுத்தினாள் சௌதாமினி. என்னவோ டிரஸ் என் நாள் கண்ணம்மா.

பையைப் பிரித்துப் பார்த்தாள். இரண்டு சரிதார் லெட் ஃபீரி சைஸ். இரண்டு அளவுகளில் உள்ளாடை கள். சின்னக் குறிப்பு.

'அவசரத்துக்கு இரவில் கிடைத்ததை வாங்கி அனுப்பியிருக்கிறேன். பயன்படுத்திக் கொள் - காந்தன்' என்று கருக்கமாய் எழுதியிருந்தான்.

குளித்ததும் மாற்ற நாயின் சேலை தவிர அவளுக்கு வேறு மாற்று உடையில்லையே என்று அவசர மாக இரவோடு இரவாக வாங்கி, காலையிலேயே அனுப்பியிருக்கிறான். இவனைப் போய் சந்தேகப்பட் டாளே!

கழிவிரக்கம் மிகுந்த போதும், பிராயச்சித்தமாக என்ன செய்வது என்று புரியவில்லை. இனி நீலகாந்த

னைப் பற்றித் தவறாக எண்ணுவதில்லை என்று முடிவு செய்தாள்.

இரண்டொரு நாள் கூசிக் கூசி அவளோடு சேர்ந்து அமர்ந்து உணவுண்ட கண்ணம்மா, அதற்கு மேல் உணவு நேரங்களை வேலை வினையாட்டு என்று தனித்தனியே பிரிதாக எண்ணாமல் தனியா கவே உண்டாள்.

பெரிய காரியம் இல்லைதான். அவனது உணவு தான். ஆனாலும் நீலகாந்தன் மேல் துரும்பு இல்லை என்று நம்புவதைத் தனக்குத்தானே நிரூபித்துக் கொள் வது போல ஒரு நிருப்தி கொண்டாள்.

சில வீடியோ கேஸட்டுகளைக் கொணர்ந்து கொடுத்து ''பொழுது போகலை என்றால் பார்ப்பீங்க ளாம். அம்மா'' என்று கூறிச் சென்றார் காரியக்காரர்.

டி.வி. திரையில் வீடியோப் படம் ஓடிக் கொண்டி ருக்கையிலேயே உள்ளூர அவளுக்குச் சிந்தனையும் ஓடியது. வீட்டில் என்ன நடந்து கொண்டிருக்கும் என்று அதே யோசனை.

டெலிஃபோனில் தந்தையோடு பேசமுடிந்திருந் தால் நன்றாய் இருந்திருக்கும். அவளேதான் சொல்லு கிறாளே, ஆபத்து இல்லை, மூன்று நாளில் திரும்பி வருகிறேன் என்று. அதற்கு மேல் என்ன தொணப்பல் என்று மனைவியை அதட்டி அமைதிப் படுத்திவிடு வார்.

ஆனால் அம்மா வேறுவிதம். மகள் இரவில் வெளித்தங்கினால் மற்றவர்கள் என்ன சொல்லுவார் கள் என்று அதே நினைவில் உடம்பைக் கெடுத்து கொள்வார்களே என்று கவலைப்பட்டாள் மகள்.

7

சொல்லப் போனால் தாயாரின் அந்தப் பயம் கூட அனாவசியம் தான்.

எப்போதும் அண்டை அயல் சென்று வம்பு பேசுவதையோ, மற்றவர்கள் இவர்கள் வீட்டை மைய மாக்கி வந்து பேசுவதையோ சிவகுரு ஒரு நாளும் ஊக்குவித்ததில்லை. எனவே சௌதாமினி வீட்டில் இருப்பதும் இல்லாததும் பெரிய விஷயமாய் வெளியே பரவப் போவது இல்லை.

வீட்டு வேலைக்காரி ஆண்டாளம்மா அடுத்த டுத்து நாலு வீடுகளில் வேலை செய்கிறவள்தான். அவள் எப்போதும் சௌதாமினியிடம் நன் மகளைப் பற்றிக் குறைப்படுவாள். "என்னம்மா, நீ எப்படி யாராச்சும் அண்டை அசல் ஆம்பிளைங்ககிட்ட நின்னு ஒரு வார்த்தை பேசாம ஒழுங்கா இருக்கிறே. என் பொண்ணைப் பாரு எவன் கிட்டயும் பல்லக் காட்டி இளிக்கிறது. ஒருநாள் கூட்டியாரேம்மா கொஞ் சம் புத்தி சொல்லு" என்பாள். அவளும் ஒரு மூன்று நாட்கள். அவள் வேலைக்கு வரும் நேரத்தில் சௌதா மினி வீட்டில் இராததைப் பெரிதாக, அதிலும் தவறாக எண்ணிக் கதையளக்கப் போவது இல்லை.

அதனால் ஊர், உலகம், வருங்கால மாப்பிள்ளை என்ற எந்தவிதப் பாதிப்பும் ஏற்படப் போவதில்லை என்பதை உணர்ந்து அம்மா நிம்மதியாக இருக்க வேண்டும் கடவுளே என்று வேண்டிக் கொண்டாள் சௌதாமினி.

இதில் ஒரு கயநலமும் உண்டுதான். தானாக யோசித்துத் தேறிவிட்டால், மூன்று நாள் கழிந்து,

நாலாம் நாள் அவள் வீட்டுக்குச் செல்லும் போது டோஸ் எதுவும் விழாது...

விடியா இரவே, தொலையாப் பகலே என்று இருபகல்களையும் மூன்று இரவுகளையும் தொடுத் தள்ளிய பிறகு அதற்கு அடுத்த நாள் காலையிலேயே காருடன் வந்து நின்றான் நீலகாந்தன். "கிளம்ப லாமா?"

"ஓ" என்று மகிழ்ச்சியோடு முன்னே வந்தவள், சட்டென நின்றாள். "இது... இந்தச் சுரிதார் உங்களு டையது. மாற்ற வேண்டும்."

"என்னுடையதா?" இரு புருவங்களையும் உச்சி மேட்டுக்கே கொண்டு சென்று வியந்தான் நீலகாந்தன். "எனக்கு நினைவு தெரிந்து நான் சுரிதார் அணிந்ததே இல்லை. அதிலும் நிச்சயமாய் இந்தச் சுரிதாருக்குள் என்னைத் திணிப்பது முடியாத காரியம்" என்று சிரித்தான்.

தன்னை மீறிச் சிரிந்து விட்டு, உடனே உச்சென்று கடுத்து, "நீங்கள் அணிந்து கொண்டால் தான் ஒரு பொருள் உங்களுடையது ஆகுமா? இந்த வீடு உங்க ளுதுதான். நீங்கள் அதை உடம்பில் சுற்றிக் கொண்டா நிற்கிறீர்கள்?" என்று அவனை மடக்க முயன்றவளி டம், "வீட்டையா? என்னைச் சாகடிக்க நல்ல வழி பார்த்தாய் சது. ஒரு சுவரை மேலே ஏற்றினால் போதுமே சட்டினிதான்." என்று கூறி மேலும் சிரிக்க வைத்தான் அவன்.

மேலும் சிரித்துவிட்டு, "வார்த்தைக்கு வார்த்தை மல்லுக் கட்டுகிறீர்களே! உங்கள் பணத்தில் வாங்கி யது, உங்களுடையது என்றேன். இப்போது தானே என்னுடையதை நனைத்துப் போட்டேன். நீங்கள் மாலையில் தான் வருவீர்கள், வருவதற்குள் காய்ந்து விடும் என்று நினைத்தேன்" என்றாள் அவள்.

"பரவாயில்லை. அடுத்த நடவை வரும்போது எடுத்துக் கொள்ளலாம். என்று இலகுவாக உரைத்த வனை முறைத்து "அடுத்த நடவையா? இங்கேயா? நானா? சான்சே கிடையாது" என்றாள் சௌதாமினி. அழுத்தம் திருத்தமாக.

ஒரு கணம் தயங்கிவிட்டு, "ஓகே!" என்று தோல்வியை ஒத்துக் கொண்டாற்போல் நோளைக் குலுக்கினான் அவன். "அப்படி வராத பட்சத்தில் எனக்கு ஒரு ஜூப கார்த்தமாக இங்கேயே அது இருக்கட்டும்!" என்று ஓர் அமர்ந்த குரலில் நீலகாந்தன் கூறியபோது அவளால் மறுக்க முடியவில்லை.

விலை மதிப்பு என்றால் அவள் இப்போது அணிந்திருப்பதும் அவள் விட்டுவிட்டுப் போகப் போவது போலத்தான். அத்தோடு, நீலகாந்தனின் நினைவாக அவளுக்கும் ஒன்று வேண்டுமல்லவா?

மனதை ஒருவிதப்பாரம் அழுத்துவது போல உணர்ந்தவளுக்கு, அதன் காரணம் பிடிபட மறுத்தது. ஏதோ துன்பம்தானே, அதுவாய்ப் புரிகிறபோது புரியட்டும். இப்போதே யோசித்துக் கண்டுபிடித்து வருத்தப்படுவானேன் என்று எண்ணி அதை ஒதுக்க முயன்றபடி, "கிளம்புவோமா?" என்று கேட்டாள்.

சௌதாமினியின் வீட்டுக்குச் சற்றுத் தொலைவி லேயே காரை நிறுத்தினான் நீலகாந்தன். உடனேயே, காரை விட்டு இறங்க முற்பட்டவளைத் தடுத்து, "சா வால் நினைவிருக்கிறதல்லவா, சது? தோற்றால் நீ என்னிடம் வரவேண்டும் தவிர... தவிர வேறு முடிவு எதற்கும் போய்விடக்கூடாது..." என்றவன் அவள் புரியாமல் விழிக்கவும், சற்றே தடுமாறி, "இந்த உலகத் தில் ஒன்றுமே இல்லையென்று..." என்று முடிக்கா மலே நிறுத்தினான்.

வியந்த பார்வையுடன் அப்போதும் விளங்கா மல் யோசித்தவள் சட்டென வாய்விட்டுச் சிரித்தாள்.

"அதாவது நான் தற்கொலை செய்து கொண்டு விடக்கூடாது என்கிறீர்களா?" என்று கேட்டுவிட்டு மேலும் நகைத்தாள்.

அவன் உணர்ச்சியற்ற முகத்துடன் பார்த்துக் கொண்டிருக்க, ஒருவாறு சிரித்து முடித்துவிட்டு, "தற் கொலைக்குக் காரணமே இருக்கப்போவது இல்லை. என்னை நம்பாமல் யாரும் - வீட்டு வேலைக்கார ஆயா உட்பட யாரும் என்னை நம்பாதிருக்கப் போவது கிடையாது. ஆனால் உங்கள் திருப்திக்காக வேறுமானால் இன்னொன்றும் சொல்லுகிறேன். பிரச் சினைக்கு அஞ்சித் தற்கொலை செய்து கொள்ளும் அளவுக்கு நான் கோழை அல்ல என்றாள் சௌதா மினி மிகுந்த நம்பிக்கையோடு.

"நான் வரட்டுமா? என்று அவன் காரை விட்டு இறங்க முயற்சித்தபோது மீண்டும் நீலகாந்தன் அவளைத் தடுத்தான்.

இன்னும் என்ன, என்பது போலப் பார்த்தவளி டம், பையிலிருந்த 'விசிட்டிங் கார்டு' ஒன்றை எடுத் துக் கொடுத்தான். "என் அலுவலக விலாசம் மற்ற நேரங்களில். அந்த ஒட்டல் அறை நினைவிருக்கிறதல் லவா? அங்கேதான் இருப்பேன். என்னிடம் வருவதற் காக மட்டுமல்ல. ஏதேனும் உதவி தேவை என்றாலும் தயங்காமல் தொடர்பு கொள்ளலாம்.

நீ என்ன எனக்கு உதவுவது என்று எடுத்தெறிந்து பேசவோ, மறுத்து உரைக்கவோ மனமின்றி தலை யாட்டி விட்டு இறங்கினாள் சௌதாமினி. "பை!" என்று கையாட்டி விட்டுத் தன் இல்லம் நோக்கித் துள்ளலுடன் நடந்தாள்.

வீட்டை நெருங்க நெருங்க ஏதோ வித்தியாச மான உணர்வு - முதுகை எங்கெயிருந்தோ எதுவோ துளைப்பது போல உணர்ந்தாள். யார் யாரோ அவளை வெறித்துப் பார்க்கிறார்கள் என்று உணர்ந் தாள்.

ஆனால் திரும்பிப் பார்த்தோ, நேர் பார்வை யிலோ யாருடைய கண்ணையும் அவள் சந்திக்கவே இல்லை.

அங்கே யாரும் ஒரேயடியாக உருகி வழிகிற ரகம் இல்லைதான். ஆனால் பார்த்தால் புன்னகை யோடு பழகும் இவர்களுக்கு இப்போது என்ன ஆயிற்று? நெருவில் எதுவும் அசம்பாவிதம் நேர்ந்தி ருக்குமா என்று யோசித்தாள். ஆனால் நின்று யாரிட மும் அதைக் கேட்டுத் தெரிந்து கொள்ளும் பொறுமை யும் இல்லாது போகவே மடமடவென்று வீட்டை அடைந்து படி ஏறினாள்.

தந்தை வீட்டில் இருக்கும் நேரம் என்பதால் வெறுமனே சாத்தியிருந்த கதவைத் தள்ளித் திறந்து கொண்டு உள்ளே போனாள். தாயார் ஹாலிலேயே இருந்தாள்.

தாயைக் கண்ட கன்றெனக் கைகளை விரித்துக் கொண்டு "அம்மா!" என்று சாரதாவிடம் ஓடினாள்.

என்னவோ, ஆண்டுக் கணக்கில் பிரிந்திருப்பது போல உணர்வு அவளுக்கு. ஆனால் நில்லு என்பது போலக் கைச்சாடையுடன் இரண்டு எட்டு வேகமாகப் பின்னடைந்தாள் தாயார். மகளை ஏற இறங்க நோக்கி, "இது என்ன துணியடி, இது?" இது உன்னது இல் லையே! கருமம், கருமம்! போய் முதலில் இதைக் கழற்றி எறிந்து விட்டு நன்றாகத் தேய்த்துக் குளி. என்னை சீயக்காய் கொண்டு வந்து தருகிறேன். நன்றாகத் தேய்த்து தலை முழுகு."

சௌதாமினி திகைத்து நின்றாள். இந்த மூன்று நாள் பிரிந்திருந்த ஏக்கம் அம்மாவுக்கு ஏன் இல்லை.

"அப்புறம் குளிக்கிறேன். அம்மா முதலில் என்ன நடந்தது என்று...."

மீண்டும் விலகி, "முதலில் குளித்துவிட்டு வா என்கிறேன். கேட்கவில்லை? அந்தத் துணியைப்

பார்த்தாலே குமட்டுகிறது. அதையும் தலையைச் சுற் றித் தூர எறி. எல்லாவற்றுக்கும் சேர்த்து உச்சந்தலை யில் நன்றாக இரண்டு கை எண்ணையை வைத்துத் தலைமுழுகு." என்று அதட்டினாள் சாரதா.

ஜெயகாந்தனின் 'சில நேரங்களில் சில மனிதர் கள்' நினைவு ஏனோ வந்து சௌதாமினிக்கு நெஞ்சில் வலித்தது.

தலைமுடியைத் தொட்டுப் பார்த்துவிட்டு, "அ ழுக்காகக் கூட இல்லை. அப்படியே அழுக்காளாலும் நான் ஒரம்பு நானே அம்மா தேய்ப்பது? எதற்கு என்னையும் சீயக்காயும்?" என்று மிடுக்காகக் கேட்க வும் சாரதாவின் முகம் கன்றியது.

"எதையாவது சொன்னால் சொல் பேச்சு கேட் டால் தானே? அங்கே நின்று என்ன முழித்துக் கொண்டு இருக்கிறீர்கள்? வந்து ஒர் அதட்டல் போட வேண்டியது தானே?" என்று கணவரிடம் பாய்ந்தாள்.

சட்டெனத் திரும்பித் தந்தையைப் பார்த்ததும் ஆவலாகப் பேச வாயெடுத்தவளைக் கை உயர்த்தி அமர்த்தினார் சிவகுரு. "பொறும்மா. முதலில் அம்மா வின் பேச்சைக் கேளேன். உன்னை அவள் குளித்து விட்டு வரந்தானே சொல்கிறாள். அதைச் செய்வதற்கு என்ன நடை?" என்றார் அவா களைப்புற்ற குரலில்.

தந்தையின் குரலையும், ஷேவ் பண்ணாத முகத் தையும் கண்டு, "அப்பா, என்னப்பா? உடம்புக்கு என்னப்பா செய்கிறது?" என்று கவலையுடன் வினவி னாள் மகள்.

"உடம்புக்கு என்னவா? வீட்டுப் பெண் மூன்று நாட்களாக இருந்த இடம் தெரியவில்லை என்றால் உடம்பு வேறு எப்படி இருக்குமாம்?" என்று எரிந்து விழுந்தாள் சாரதா.

"என்ன அநியாயம்? என்னம்மா நீங்கள்? நான் உங்களிடம் தானே சொன்னேன்? ஆபத்து எதுவும்

இல்லை. மூன்று நாளில் திரும்பிவிடுகிறேன் என்றேனே.'' என்று திருப்பிக் கேட்டாள் சௌதாமினி.

''ஆமாம். சொன்னாயடி சொன்னாய். அப்படிச் சொல்லும்படி எவனாவது துப்பாக்கியை நெற்றிப் பொட்டில் வைத்து மிரட்டினானா, அல்லது கத்தியை உன் கழுத்தில் வைத்துப் பயமுறுத்தினானா என்று இந்தப் பக்கம் போனில் தெளிவாகத் தெரிந்தது, பார்!'' என்று தாயார் மேலும் ஆத்திரமாய்ச் சீறவும், சௌதாமினி அயர்ந்து போனாள்.

இப்படி ஒரு விளக்கத்தை அவள் சற்றும் எதிர் பார்க்கவில்லையே!

''அய்யோ! அப்படி நினைத்து பயந்து விட்டீர்களாம்மா? எனக்கு ஒன்றும் இல்லை. இரண்டு பேரும் கவலையில் சரியாகச் சாப்பிடக்கூட இல்லை போல இருக்கிறதே! சே. அதுதான் விவரம் சொல்லியாயிற்றே என்று நான் பாட்டில் மூன்று வேளையும் மொக்கி விட்டேன். நீங்களானால்... காலையில் ஏதாவது சாப்பிட்டீர்களா அப்பா? நான் ஏதாவது....'' என்று சமையல் அறைப்பக்கம் திரும்பினாள் மகள்.

''இந்தாடி, முதலில் குளித்துவிட்டுவா, எவன் வீட்டுத் துணியையோ நீ மேலே போட்டுக் கொண்டு நின்றால் எனக்கு பார்க்கவே அருவருப்பாக இருக்கிறது.'' என்றாள் சாரதா வெறுப்புடன்.

''என்னுடையதற்குப் பதிலாகத்தானே அம்மா...'' என்று தொடங்கியவளைத் தந்தை இடையிட்டு அடக்கினார். ''அம்மா குளித்துவிட்டு வரச் சொன்னால் சரியென்று செய்தால் என்னம்மா? ஒரு சின்ன விஷயத்துக்குப் போய் இவ்வளவு வாக்குவாதமா? போம்மா. போய்க் குளித்துவிட்டு, நல்லபடியாய் ஒரு சேலையைக் கட்டிக் கொண்டு வா... ப்ளீஸ். இதற்கு வேறு மல்லுக் கட்டாதே. போ. போய்ச் சொன்னதைச் செய்.''

பேசவாய் திறந்தவள், தந்தையின் அழுத்த குரலில் அடங்கி மடமட வென்று உள்ளே சென்றாள். வேகமாகக் குளித்து முடித்து விட்டு, ஒரு சேலையையும் எடுத்துக் கட்டிக் கொண்டு மீண்டும் ஹாலுக்கு வந்தாள்.

தொப்பென சோபாவில் அமர்ந்து, ''அம்மா, அப்பா, இந்த மூன்றுநாளில் என்ன நடந்ததோ என்று என்னென்னவோ இல்லாததை எல்லாம் எண்ணிக் கலங்கிக் கொண்டு இருப்பதை விட்டு இப்போதாவது என்ன நடந்தது என்று நான் சொல்வதைக் காது கொடுத்துக் கேட்கிறீர்களா?'' என்று கேட்டாள்.

''சொல்லு'' என்ற தந்தையின் இறுகிய தோற்றத்தையும், தாயாரின் கண்ணீரை அடக்க முயல்வதையும் கண்டு, ''முதலில் தெரிந்து கொள்ளுங்கள் எனக்கு எந்தவிதமான கொடுமையும் நடக்கவில்லை. உங்களை விட்டு பிரிந்து இருக்க நேர்ந்தது தவிர எனக்கு ஒரு சிறு துன்பம் கூட நேரவில்லை'' என்றாள் முதலில்.

இரு ஜோடி விழிகளும் வியப்பும் சந்தேகமுமாக அவளை நோக்கின. ''பின்னே மாப்பிள்ளை சொன்னாரே!''

''என்ன சொன்னார்?''

''அவரது 'பிளாட்டை உனக்குக் காட்டிக் கொண்டிருந்த போது யாரோ அவரைப் பின்னிருந்து தலையில் அடித்துப் போட்டுவிட்டு உன்னைத் தூக்கிக் கொண்டு போனதாகச் சொன்னாரே!''

வேறே என்ன சொல்லத் தைரியம் வரும் என்று ஆத்திரத்துடன் எண்ணினாள் சௌதாமினி. உங்கள் பெண்ணிடம் தப்பாக நடக்க முயன்றேன்.

அன்னியன் ஒருவன் வந்து அவளைக் காப்பாற்றி அழைத்துச் சென்றான் என்ற பதைபதைப்பு முடியும்? வாயைத் திறந்தால் ரவீந்திரனைப் பற்றி

மகாமட்டமாய் ஏதாவது சொல்லிவிடக்கூடும் என்ற பயத்தில் சிலகணங்கள் வாயை இறுக மூடிக் கொண்டு அமர்ந்திருந்தாள் சௌதாமினி.

"என்ன, பேசாமல் இருக்கிறாய்?" என்று சாரதா அதட்டிய பிறகே மீண்டும் பேசினாள் மகள்.

"அது.... அது அப்படி அல்ல, அம்மா..."

"பின்னே மாப்பிள்ளை பொய்யா சொல்வார்?" பொறுமையிழந்து, "நான் மட்டும் பொய் சொல்வேனா?" என்று பதிலுக்குச் சீறினாள் சௌதாமினி. தொடக்கமே சரியாக இல்லையே என்று அவளுக்கு உள்ளூரக் கலங்கத் தொடங்கியிருந்தது. முழுக்க முழுக்க அவள் சொல்லுவதை நம்ப வேண்டியவர்கள், நம்புவார்கள் என்று சவால் விடுமளவுக்கு அவள் நம்பி அவளுடைய பெற்றோர். அவளைவிடவும் ரவீந்திரனை நம்புவது போலப் பேசுகிறார்களே! அந்தோடு இன்னும் ஒரு கஷ்டம் நாளை கணவனாக ஆகப் போகிறவனைக் காட்டிக் கொடுப்பதும் சரியாகப் படவில்லை. ஒரு கௌரவமான உறவைக் கரும் புள்ளியோடு தொடங்குவதும் சரியில்லையே.

வேகமாக யோசித்து, "அது அப்படியில்லை அம்மா. இந்த ஆள், என்னை அழைத்துச் சென்றவர் நல்லவர்தான் அம்மா" என்று தொடங்கினாள்.

"நல்லவர்தான் பின்னாலிருந்து தலையில் அடித்தாராக்கும்?"

யாரும் பின்னாலிருந்து அடிக்கவும் இல்லை. ஆனால் அதையும் சொல்ல முடியாது. ரவீந்திரனைப் பார்க்கும் போது ஏன் இப்படிப் பொய் சொன்னீர்கள் என்று நன்றாய்த் திட்ட வேண்டும்.

"அம்மா, அவருக்கு ஓர் எண்ணம். ரவீந்திரன் எனக்குத் தருதியில்லை என்று..."

ஆமாம். பெற்றுப் பொய் வைத்து வளர்த்தவன் பார் உனக்கு யார் தருதி, தருதியில்லை என்று எங்களை விடவும் அந்த ராஸ்கலுக்குத் தான் ரொம்பவும் தெரியும்!"

பொறுமை இழந்து, "என்னம்மா, வார்த்தைக்கு வார்த்தை வெட்டி வெட்டிப்பேசினால் நான் என்ன வென்று விளக்கட்டும்? அவருடைய அபிப்பிராயம் அது. அதை அடிப்படையாக வைத்து ஏதோ செய்து விட்டார். அதை நான் ஒத்துக் கொண்டு விட்டேனா? இல்லையே! எதையுமே முழுவதுமாகச் சொல்லக்கூட விடமாட்டேன் என்கிறீர்களே!" என்று சௌதாமினி பொருமியதும், சிவருரு குறுக்கிட்டார்.

"அவள் சொல்லி முடிக்கட்டும். அதுவரை கும்மா இரு." என்று மனைவியைப் பணிந்தவர், "நீ மேலே சொல்லு" என்று மகளிடம் உத்திரவிட்டார்.

ரவீந்திரனைக் காட்டிக் கொடாமல் ஒருவாறு சௌதாமினி நடந்த வற்றைச் சொல்லி முடிக்கவும் சற்று நேரம் அங்கே சத்தமே இல்லை.

மயான அமைதி

நிசப்தம் நீளவும் நெஞ்சுக்குள் பிசைய, நிமிர்ந்து, பெற்றோரின் முகங்களை ஆராய்ந்தாள்.

கல்முகங்கள்!

"எங்கள் வீட்டு வேலைக்காரி உட்பட எல்லோரும் என்னை நம்புவார்கள் என்று சவால் விட்டிருக்கிறேன் அப்பா" என்றபோது அவளுக்கு குரல் விக்கியது.

லேசாகத் தொண்டையைச் செருமிக் கொண்டு, "நம்பாமல் என்ன?" என்று சிவருரு தொடங்கிய போது வாயிலில் கார் ஒன்று வந்து நின்றது.

அதிலிருந்து ரவீந்திரன் இறங்கி வீட்டுக்குள் வந்தான்.

8

ரவீந்திரன் சௌதாமினியை அங்கே அப்போது எதிர்பார்க்கவில்லை என்பது நன்றாகவே தெரிந்தது.

ஆனால் ஒன்று. பெற்றவர்களைவிட அவன் முகத்தில் மகிழ்ச்சி இருந்தது. ''மினி...'' என்று ஆவலுடன் அவள் அருகில் வந்தான்.

''வாங்க மாப்பிள்ளை'' என்ற சிவகுருவின் குரல் கேட்கவும் சட்டென அவன் முகம் மாறியது.

''ஆ.. ஆமாம்...'' என்று உடனே சமாளித்து, ''அத்தை தொண்டை ஒரே வறட்சி. உங்கள் ஸ்பெஷல் காப்பி கிடைக்குமா?'' என்று கெஞ்சுதலாகக் கேட்கவும் சாரதா அவசரமாகச் சமையலறைப் பக்கம் சென்றாள்.

சிவகுருவிடம் திரும்பி, ''உடனே திரும்பிடலாம் என்று காரைச் சும்மா கண்டமேனிக்கு நிறுத்திட்டு வந்தேன். ரோட்டில் ரொம்பவும் குறுக்காக நிற்கிறதா என்று பார்த்து விட்டு வருகிறீர்களா மாமா?'' என்று அவரையும் அனுப்பி வைத்தான்.

மறு பேச்சின்றி அவரும் செல்லவும் சௌதாமினியை நெருங்கி, ''அந்தக் காத்தவராயனைப் பார்த்ததே இல்லை, யார் என்றே தெரியாது என்று உன் பெற்றோரிடம் சொல்லியிருக்கிறேன். நீயும் அதற்குத் தோதாகவே நடந்து கொள்'' என்று எச்சரித்தான். ''ஏற்கனவே எதையும் உளறி விடவில்லையே?'' என்று கேட்டவன், சிவகுரு திரும்பி வருவதைக் கண்டதும், ''உனக்கு என்ன ஆயிற்றோ ஏதோ என்று எல்லோரும் மிகவும் கவலைப் பட்டோம்'' என்றான் உரக்க.

''கடவுள் கிருபையால் நாம் பயந்து கலங்கியது போல எதுவும் நடக்கவில்லை. மாப்பிள்ளை, என்ன நடந்தது என்று அவரிடம் சொல்லேன்'' என்றார் சிவகுரு நயந்த குரலில்.

கிளிப்பிள்ளையைப் போல உணர்ச்சியற்ற குரலில் அப்படியே ஒப்பித்தாள் சௌதாமினி.

''என்னடா இது ஒரே ஆச்சரியமாய் இருக்கிறதே! முன்னே பின்னே தெரியாத அந்தத் நடியனுக்கு நீ யாரைக் கல்யாணம் செய்து கொண்டால் என்ன வாம்? பைத்தியக்காரனாய் இருப்பான் போலத் தெரிகிறது.''

''ஆமாம். ஆமாம். அப்படித்தான் இருக்க வேண்டும்'' என்று வருங்கால மருமகனின் வார்த்தைகளைப் பற்றிக் கொண்டு, அவனைக் குஷிப்படுத்தப் பெற்றோர் முயல்வதைக் காணச் சௌதாமினிக்குப் பரிதாபமாக இருந்தது. அவன் திருமணத்தை மறந்து விடக் கூடாதே என்ற பயம் அல்லவா இதற்குக் காரணம்?

ஆனால் அவ்வளவு எளிதாக ரவீந்திரனை விட்டுவிட மனம் இல்லாமல், ''அவர் அப்படி ஒரேயடியாய் முன்னே பின்னே தெரியாதவர் இல்லை ரவீந்திரன். நாம் இருவருமே அவரைப் பார்த்திருக்கிறோம்'' என்று கூறி அவள் முகத்தைக் கன்ற வைத்தான்.

''அன்றைக்கு நாம் 'ஷாப்பிங்' போய்த்திரும்பும் போது வழியில் பார்த்து என்னை ஒட்டலுக்கு இவர் அழைத்துப் போனாரே அப்பா, அன்று அந்த ஒட்டலில்...'' என்று அவனை மேலும் முகம் வெளுக்க வைத்துவிட்டு, ''பக்கத்து மேஜையில் இருந்து சாப்பிட்டார்'' என்று முடித்தாள்.

ரவீந்திரனுக்கு மூச்ச இரைப்பதைக் காண்கையில் அவளுக்கு மிகவும் திருப்தியாக இருந்தது.

அவன் சொன்ன பொய்க்கு இந்தத் தண்டனை போதும் என்று தீர்மானித்து, ''நீங்கள் எல்லோரும்

என்னை நம்புவீர்கள் என்று சவால் விட்டிருக்கிறேன் ரவீந்திரன். மற்றவர்களை விட இந்த விஷயத்தில் உங்களுக்கு என்னை நன்றாகத் தெரியும் என்று நினைக்கிறேன். சரிதானே? இப்போது சொல்லுங்கள். நான் சொல்வது முழுவதையும் நம்புகிறீர்கள் தானே?'' என்று அவளிடம் நேராகக் கேட்டாள்.

தன் பேச்சை விடுத்து, ரவீந்திரனின் கவனமும் பார்வையும் தன் உடலில் பதித்திருப்பதைப் பார்த்த தும் வெறுப்புற்று சேலையை இழுத்து ரவிக்கையின் கீழ்த் தெரிந்த பழவழப்பான இடைப்பகுதியை அவ சரமாக மூடினாள்.

''என் கேள்விக்கு நீங்கள் இன்னமும் பதில் சொல்லவில்லை. சொல்லுங்கள், நீங்கள் என்னை நம்புகிறீர்களா இல்லையா?''

''எ...என்னது?''

பொறுமையை இழுத்துப் பிடித்துக் கொண்டு, ''எனக்கு இந்த மூன்று நாட்களில் எந்தவித இழப்பும் நேரவில்லை என்று நான் சொல்வதை, நான் சொன் னால் நீங்கள், அப்பா, அம்மா, என் வீட்டு வேலைக் காரி கூட நம்புவாள் என்று சவால் விட்டு விட்டு வந்திருக்கிறேன். இப்போது, நீங்கள் என்னை நம்புகி றீர்களா இல்லையா?'' என்று மீண்டும் கேட்டாள் அவள்.

அவனது நேர்ப்பார்வையைத் தவிர்த்தபடி, '' பின்னே! உன்னை நம்பாமலா? நம்புகிறேனே. இப் போது நான் கிளம்பட்டுமா? வந்து... காபிக்கு நன்றி அத்தை. நீங்கள் என்னோடு கொஞ்சம் வரமுடியுமா, மாமா? இங்கே 'ரிட்ரெடிங்' பண்ண டயர் கொடுக்க வேண்டும். சீக்கிரம் திருப்பித் தர வேண்டும் என்று நீங்கள் கொஞ்சம் சொல்ல வேண்டும். இந்தப் பக்கம் உங்களுக்குத் தெரிந்த இடமல்லவா?''

அவன் 'டயர்' விஷயம் பார்ப்பதற்காகச் சிவகு ருவை அழைத்துச் செல்லவில்லை எனபது எல்லோ ருக்குமே நன்றாகவே புரிந்தது.

சற்றுப் பொறுத்துத் திரும்பி வந்த சிவகுருவும் அதுவே மெய் என்பது போல, மனைவியிடம் குசுகு வென்று பேசினார்.

பிறகு, மகளை நேராகப் பாராமல், மனைவியி டமே பேசினார். ''இதுவே இன்னொருத்தனா இருந் தால் பின்னங்கால் பிடரியில் இடிபட ஓடியிருப்பான். என்னமோ, இவர் நல்லவர் என்பதால் இந்த அளவு இறங்கி வந்திருக்கிறார். இன்றைக்கு சாயங்காலம் டாக்டரிடம் போக வேண்டும்.. உன் மகனை ரெடி யாக இருக்கச் சொல்லு.''

''ஏன்? ஒன்றைச் சொல்லாகக் கேட்டாள் சௌந தமிலி. அவளும் மூட்டாள் அல்லவே!

''போக வேண்டுமென்றால் சரியென்று போயேன். ஏன், எதுக்கு என்றெல்லாம் என்ன கேள்வி?'' என்று சிடுசிடுத்தாள் அன்னை.

''எனக்கு உடம்புக்கு ஒன்றும் இல்லை. டாக்டரி டம் போகவேண்டும் என்றால் 'ஏன்' என்று கூட நான் கேட்கக் கூடாதா?'' என்று அழுத்தம் திருத்தமாகக் கேட்டாள் மகள்.''

''ஆமாம். கேட்கிறமாதிரி கஷ்டத்தையா இழுத்து வந்து தொலைத்திருக்கிறாய்? உன்னைப் பெற்றதற் கு...''

அழுகையும் ஆத்திரமுமாகப் பேசிய மனைவி யைச் சிவகுரு அடக்கினார்... ''ஷ். நீ சும்மா இரு சாரதா. அவளுக்கு நான் சொல்கிறேன்.'' என்று கூறி மகளிடம் திரும்பினார்.

"இதோ பார் சௌதாமினி. இவ்வளவுக்குப் பிறகும் ரவீந்திரன் உன்னைக் கல்யாணம் பண்ணிக் கொள்ளச் சம்மதிக்கிறார்..."

அவன் பார்வை நினைவு வர, சௌதாமினியின் முகம் கடுத்தது. சம்.மதிக்கிறனாமாக்கும். பெரிய தர்மதாதா! என்று உள்ளூர ஆத்திரப்பட்டாள்.

அதைவிடவும் தந்தையின் வார்த்தைப் பிரயோகம் தாக்க, "இவ்வளவுக்குப் பிறகும் என்றால் என்னப்பா அர்த்தம்?" என்று விளக்கம் கேட்டாள்.

"ஏண்டி, மூன்று ராத்திரி அடுத்தவன் வீட்டில் போய் உட்கார்ந்திருந்து விட்டு வந்திருக்கிறாயே, அது போதாது?"

"என்னம்மா, நானாகப் போகவில்லை, தூக்கிப் போனார் என்று முதலிலேயே நான் சொல்லவில்லையா?"

"சொன்னாயடி, சொன்னாய். ஆனால் அதை மட்டுமா, சொன்னாய்? அங்கே மூணு வேளையும் மொக்கியதாகச் சொன்னாயே! அவன் வாங்கிக் கொடுத்ததை வெட்கமில்லாமல் உடம்பின் மேலே போட்டுக் கொண்டு வந்திருக்கிறாயே! சரிதாராம் சரிதார், கண்ணியமாய் ஒரு சேலையைக் கட்டிக் கொண்டு சென்றிருந்தால் எவனாவது கிட்ட வருவானா?"

"என்னம்மா! அன்று சரிதார் அணியச் சொன்னதே நீங்கள் தானே? அத்தோடு சரிதார் அணிந்தால் கௌரவமாகத்தான் தெரிகிறது என்றது நீங்கள் தானே" என்று ஆத்திரத்துடன் குறுக்கிட்டுப் பேசியவளுக்குத் தாயின் பேச்சின் பின்னே மறைந்து நின்ற பொருள் புரியவும் அதிர்ந்தாள்.

அன்னையின் பேச்சை முழுமையாகச் சேரித்த வள் நிமிர்ந்தபோது அவளது கண்களில் நெருப்பு

கனல் வீசியது. "இப்போது என்னதான் சொல்கிறீர்கள்?" என்றாள் ஆத்திரத்துடன்.

"மாப்பிள்ளை சொல்லுகிற பரிசோதனையைச் செய்து கொள்"

"பரிசோதனை என்ன பரிசோதனை? ரொம்பவும் நகாசு பூசுகிறீர்கள்! 'வர்ஜினிட்டி டெஸ்ட்' என்று வெளிப்படையாகச் சொல்லுங்களேன். நான் கன்னிதான் என்று டாக்டரிடம் காட்டிப் பரிசோதனை செய்து நிரூபிக்க வேண்டும். அப்படித்தானே?"

ஒரு கணம் தயங்கிவிட்டு, "அப்படித்தான்" என்றாள் சாரதா.

"யுக யுகாந்திரங்கள் மாறினாலும் அறிவியல் வளர்ச்சியால் வானையே வென்று விட்டதாகப் பீற்றிக் கொண்டாலும், ஆண்களின் புத்தி மட்டும் அரிச்சுவடி அளவிலேயே தான் நிற்கும் போல் இருக்கிறது. அன்று அக்கினிப் பரீட்சை. இன்று விஞ்ஞானம் வளர்ந்ததற்கு அறிகுறியாக 'வர்ஜினிட்டி டெஸ்டா? ஆனால்... இதை... இதைச் செய்யாவிட்டால்?" என்று ஒரு நிமிர்வோடு தலையைச் சரித்துக் கேட்டாள் சௌதாமினி. "இதைச் செய்ய மறுத்தால்?"

"நீ சொன்னது எல்லாம் உண்மை என்றால் அதைச் செய்ய மறுக்க மாட்டாய்."

"அதாவது அந்தப் பரிசோதனையைச் செய்ய மறுத்தால் என்னை நீங்கள் நம்பமாட்டீர்கள். அப்படித்தானே?" என்று கோபமும் கசப்புமாக நேரடியாகக் கேட்டாள் சௌதாமினி.

சற்று தயங்கிவிட்டு, "மடியில் கனம் இருந்தால் தான் வழியில் பயப்பட வேண்டும்? தப்பு, தண்டா நடக்கவில்லை என்றால் இந்தச் சோதனையைச் செய்து நிரூபிப்பதில் உனக்கு என்ன தடை?" என்று திருப்பினாள் தாயார்.

"தடையா? தடையிருப்பதால் தயங்குவதாக நினைக்கிறீர்கள்? நம்பிக்கை என்று ஒன்று உண்டு அம்மா. தெருவில் போகிற யார் யாரோ என்னை நம்பவேண்டும் என்று நான் சொல்லவில்லை. ஆனால் என்னை பெற்று வளர்த்த நீங்கள்? நம் பெண் தப்பு செய்வாளா? என்று உங்களுக்குத் தெரிய வேண்டாமா? அதற்கு ஓர் 'ஐ.எஸ்.ஐ' முத்திரை வேண்டும் என்றால் நீங்கள் என்னை நம்பவில்லை என்றுதானே அர்த்தம்?"

"நம்பாமலா நடுவீட்டில் கூட்டி வைத்துப் பேகிறோம்..?"

நம்பவா செய்கிறீர்கள்? கூடை நெருப்பைத் தலையில் அள்ளிக் கொட்டிக் கொண்டு இருக்கிறீர்கள்... ஆனால் எப்போதுமே புரிந்து கொள்ளாமல் சுள்ளென்று பேசுவது அம்மாவின் குணம். செய்யாத தப்புக்கு விசாரிக்காமலே தண்டனை கொடுப்பது கூட சிறுவயதில் இருந்தே அம்மாவுக்கு வழக்கம்தான். ஆனால் இது எவ்வளவு பெரிய விஷயம் என்று புரியவில்லையே!

தந்தையிடம் திரும்பி, 'நீங்கள் என்னப்பா சொல்லுகிறீர்கள்?" என்று கேட்டாள் சௌதாமினி.

"நான் என்னம்மா சொல்ல முடியும்? ஆனானப்பட்ட சீதையையே தன்னை நிரூபிக்கும்படி ராமர் சொன்னார். மாப்பிள்ளையைக் குற்றம் சொல்ல முடியாது."

"நான் ரவீந்திரனைப் பற்றி பேசவில்லை. நீங்கள் என்ன சொல்கிறீர்கள்? அதைச் சொல்லுங்கள் போதும்." என்றாள் மகள்.

தலையசைத்து, களைப்புற்ற குரலில் அவர் கூறினார். "சொல்லு. சொல்லு என்றால் சொல்வதற்கு என்ன இருக்கிறது. சது? மூன்று நாட்கள்! இரவும் பகலுமாய் என்னென்ன எண்ணிக் கலங்கியிருப்போம், எப்படித் தவித்திருப்போம்? அதையும் நீ கொஞ்சம் யோசித்துப் பார்க்க வேண்டாமா?

"அப்போது கலங்கியது சரிதான் அப்பா. அம்மா சொன்னது போல் ஒரு டெலிபோன் பேச்சில் உங்கள் கவலை தீர்ந்து விடும் என்று நான் நினைத்ததும் தப்புதான். ஆனால் இப்போது? நான் வந்து நேரில் சொல்வதை விட ஒரு வைத்திய நிருபணம் நான் நம்பக்கூடியது என்றால் அது எனக்கு அவமானம் இல்லையா?"

என் பெற்றோரிடமா நான் இப்படி வாதாட வேண்டியிருக்கிறது என்ற உள்ளுக்குள் வலித்ததை அடக்கியபடியே அவள் கேட்டாள்.

தரையைப் பார்த்துச் சங்கடப்பட்டுக் கொண்டே "அம்மா, நீ படித்த பெண்..." என்று சிவகுரு தொடங்கிய அதே சமயம் "ஆமாம். நீ பெரிய உலகமகா அரிச்சந்திரினி. பொய்யே சொன்னதில்லை. அப்படித் தானே?" என்று சாரதா சீறினாள்.

"நீ சற்றுச் சும்மா இரேன், சாரு," என்று மனைவியை அதட்டி அடக்கிவிட்டு, மகளிடம் தொடர்ந்தார் சிவகுரு.. "எது முக்கியம், எது முக்கியம் அல்ல என்பது புரிந்தவள் நீ எதெல்லாம் 'வாய்மையிடத்து' என்று வள்ளுவர் சொன்னதை அறிந்தவள். ஒரு நல்ல எதிர்காலத்துக்காக ஒரு பொய்... அது சொல்வது பிழை ஆகாது சது. நீயாகத் தப்புக்கு துணை போக மாட்டாய் என்று எங்களுக்குத் தெரியும். ஆனால் உன்னை மீறி.. உன்னை மீறி ஏதாவது நடந்திருந்தால் அதை மறுக்க முயல்வதும் மறைக்க முயல்வதும் இயல்புதானம்மா? இப்போது எங்கள் துன்பம் புரிகிறதில்லையா?"

இயல்பாமா? அவசியம் இல்லாமல் துன்பத்தை இழுத்து வைத்துக் கொண்டால் படவேண்டியதுதான். கண்களில் ஒரு குரூரத்துடனும் நீவிரத்துடனும், "என்

அப்பா. அப்படி ஏதாவது நேர்ந்திருந்தால் இந்தப் பரிசோதனையில் பாதகமான முடிவும் வரக்கூடும் அல்லவா? அப்படி வந்து விட்டால் என்ன செய்வீர்கள்?'' என்று அப்பாவியாய் விசாரித்தாள் சௌதாமினி.

ஒரு சிறு அமைதியில், தந்தையும் தாயும் பார்வையைப் பரிமாற்றம் செய்வதையும் அதில் பார்த்தாயா என்ற பாவனையையும் கண்டுபிரமித்தாள்.

துன்பம்தான். துயரம்தான். இருவரின் பார்வையிலும் வேதனை இருக்கவே செய்தது. ஆனாலும் அதைக் கண்டு இளகத் தோன்றவில்லை. அப்படி ஒரு பெரிய விஷயத்தை மகள் தங்களிடம் மறைப்பாளா என்று கூடத் தெரியவில்லை என்றால் எப்படி? தெரியாதது என்று கூட இல்லை. மறைப்பாள் என்றே எண்ணிவிடுவதா?

உள்ளே ஏதோ எரிவது போல அவளுள் காந்தல் எடுத்தது.

தொண்டையைச் செறுமிக் கொண்டு சிவகுரு அந்தத் தீயில் பெட்ரோலை ஊற்றினார். ''அந்த டாக்டரம்மா காலைக் கையைப் பிடித்து, காசைக் கொடுத்து ஒரு வாழ்வு பாழாகாமல் காப்பாற்றும்படி கேட்க வேண்டியது தான்.''

வெறுமனே எண்ணிவிட மட்டும் செய்யவில்லை. உறுதியாகச் செய்து விட்டார்கள்! இன்னும் சற்று நேரம் இவர்கள் முன்னிலையில் இருந்தால் உள்ளே எரியும் நெருப்பில் சாம்பலாகிவிடுவோமோ என்று தோன்றவும் சௌதாமினி சட்டென எழுந்தாள். ''கொஞ்சநேரம் தனியாக இருக்க வேண்டும்'' என்று எழுந்து தோட்டத்தின் பக்கம் நடந்தாள்.

தன் போக்கில் நடந்தவள், தாயார் எப்போதாவது புரியாமல் திட்டும் போது வழக்கமாக வந்து அமரும் மல்லிகைப் புதரின் அருகே வந்திருக்கக்

கண்டு, அங்கேயே உட்கார்ந்து விட்டாள். மனம் உலைக் களமாய்க் கனன்று கொண்டே இருந்தது. பெற்றவர்கள் - மக்கள் உறவு என்பது இவ்வளவு தானா? திடுமென ஆண்டாளின் குரல் கேட்கவும் நிமிர்ந்தாள். பக்கத்து வீட்டில் தினந்தடியில் ஏதோ வேலை செய்தபடி பேசிக் கொண்டு இருந்தாள்.

''மூணு நாலு நாளா எங்கியோ போய் உக்காந்திருந்திட்டு ராவா வந்திருக்குதும்மா, பெரிய இடத்துக் குச் சரியா சீர் செனத்தி செய்யப் பணம் வேணுமில்ல. சம்பாதிக்க அனுப்பினாளோ என்னமோ? நல்ல பொண்ணுன்னு நினைச்சேம்மா. சிரிச்ச சிரிச்ச பேசும். கம்மாவா சொன்னாங்க, பொம்பள சிரிச்சாப் போச்சு, போயிலை விரிச்சாப் போச்சுன்னு...'' என்று நீட்டி முழக்கிக் கொண்டிருந்தாள் அவள்.

வீட்டு வேலைக்காரி வரை அவளை நம்புவாளாமா? இப்படிச் சொல்ல, சௌதாமினி எவ்வளவு பெரிய முட்டாளாக இருக்க வேண்டும்!

நேராகச் சென்று, ஆண்டாளின் தலைமுடியைப் பிடித்து உலுக்கி, ''உன் பெண்ணைப் போல நினைத்தாயா?'' என்று கத்தவேண்டும் போல அவளுக்கு உள்ளம் கொதித்தது.

ஆனால் பெற்றவர்களுக்கே நம்பிக்கை இல்லாத போது, பாவம் நூறு ரூபாய் வாங்கிக் கொண்டு பகுதி நேர வேலை செய்யும் ஒரு படிப்பறிவில்லாத பாமரப் பெண் மேல் சினம் கொள்வது எப்படிச் சரியாகும்?

அவளைக் காட்டிலும் பன் மடங்கு தண்டனை பெற்வேண்டியவர்கள் வீட்டினுள்ளே அல்லவா இருக்கிறார்கள்!

முக்கியமான மூன்றில் இரண்டு பழுதாகிப் போயிற்று. மூன்றாவது ஏற்கனவே பாதிச்சாயம் வெளுத்தது. அதையேனும் ஒப்பேற்ற முடியுமா?

சவாலில் தோற்று விட்டதாகச் சொல்லி நீலகாந்த னின் முன் சென்று நிற்பது என்றால் அவளுக்கு மிகவும் அவமானமாக இருந்தது.

கனத்த நெஞ்சுடன் ரவீந்திரனின் வருகைக்காக காத்திருந்தாள்.

9

மாலையில் வந்த ரவீந்திரனிடம் முதலில் சௌதாமினி அமைதியாகத்தான் பேசினாள்.

ரவீந்திரன் உள்ளே வரும்போதே ரொம்பவும் அவசரத்துடன் வந்தான். "மினி, இன்னும் நீ கிளம்ப வில்லை? சீக்கிரம், சீக்கிரம்" என்று அவளைத் துரிதப் படுத்தினான்.

மோடாவில் அமர்ந்திருந்த சௌதாமினி சற்றும் அசையாமல், "நான் உங்களிடம் கொஞ்சம் பேச வேண்டும், ரவீந்திரன்," என்றாள் நிதானமாக.

"பேசலாதா..." என்று சற்று பேந்த விழித்து விட்டு, "அப்பா சொல்லவில்லை? நேரம் ஆக ஆக இந்த டாக்டரிடம் கூட்டம் பெருகிவிடும் அதனால் முதலில் டாக்டரைப் பார்த்துவிட்டு வந்து விடலாமே" என்றான் அவன்.

"கூடுகிற கூட்டம் கூடக் கொஞ்ச நேரம் ஆன பின் குறைந்துதான் ஆகவேண்டும். தேவைப்பட்டால் அப்போது போய்ப் பார்த்துக் கொள்ளலாம்." என் றாளே தவிர சௌதாமினி அசையவே இல்லை.

செய்வது அறியாமல் சிவகுருவைப் பார்க்க, அவர் மகளிடம் வந்தார். "கொஞ்சம் உள்ளே வாம் மா." என்று அழைத்துச் சென்றார்.

"மாப்பிள்ளையைக் கோபப்படுத்தாமல் கிளம்பு, அம்மா. உனக்கு எந்த விதப் பயமும் வேண்டாம். மாப்பிள்ளை சொல்லுகிற இந்த டாக்டர் எனக்குக் கொஞ்சம் தெரிந்த டாக்டர் தான். அது தெரிந்ததுமே என்னிடம் பேசாமல் எந்த ரிஸ்க்கும் சொல்ல வேண் டாம் என்று டாக்டரிடம் ஏற்கனவே எச்சரித்து விட் டேன். உன்கூடவே நானும் வரவும் போகிறேன். அதனால் பயப்படாமல் கிளம்பு." என்றார் அவர்.

"நீங்களும் வருகிறீர்களா? ஏன்? ஓகோ, மறந்து விட்டேனே. டாக்டரின் கையைக் காலைப் பிடிப்பதற் காக. அதுதானே அப்பா? பணம்? அதுவும் ரெடி யாப்பா? அவளது குரலில் இருந்த ஏளனம் மனதைக் குழப்ப, "சதா..." என்று இழுத்தார் தந்தை.

குரலில் அழுத்தத்துடன், "உங்களோடு என் பேச்சு முடிந்துவிட்டது அப்பா. அப்பா, இது எனக்கும் ரவீந்திரனுக்கும் மட்டும் நடக்கப் போகிற பேச்சு. இதைத் நடுக்கவோ தலையிடவோ முயற்சி செய்தீர் கள் என்றால் நான் இப்போதே இந்த வீட்டை விட்டு வெளியேறி விடுவேன்" என்றாள் உறுதியோடு.

"என்னடி உளறுகிறாய்?" என்றாள் உடன் வந்து நின்ற தாயார்.

"உளறவில்லை அம்மா. இது சத்தியம்." என்ற வள், பெற்றோர் இருவரும் திகைத்து நிற்கையிலேயே முன் அறைக்கு வந்தாள்.

"உட்காருங்கள்" என்று ரவீந்திரனுக்கு ஒரு பிரம்பு நாற்காலியைக் காட்டிவிட்டுப் பழைய மோடா வியிலேயே மீண்டும் அமர்ந்தாள்.

"உங்களிடம் ஒன்று கேட்க வேண்டும் ரவீந்தி ரன். என்னைப் பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?"

"இப்போது அது எதற்கு?" என்றான் அவன் சந்தேகத்துடன்.

"தம்மாதான். சொல்லுங்களேன். என்னை மணக்க முன் வருகிறீர்கள் என்றால் அது ஏன் என்று தெரிந்து கொள்ளத்தான்."

"அது... முதலில் நீ நல்ல அழகி. படித்திருக்கி றாய்... கௌரவமான குடும்பம்... அவ்வளவுதான்." என்றான் அவன் யோசித்து.

"ம்ம்" ஒழுக்கம் பற்றி ஒன்றும் நினைக்கவில் லையா?

"அதைப் பாராமலா? நீ ஒழுக்கம் காக்கிறவள் தான்."

"நிச்சயமாக அதை நம்புகிறீர்கள் இல்லையா?"

"கட்டாயமாய்! இல்லாவிட்டால் மீண்டும் இங்கே வந்திருப்பேனா?"

"அவ்வளவு நம்பிக்கை இருக்கும்போது இந்தப் பரிசோதனை எதற்கு?" என்று அவள் கேட்கவும் மீண்டும் பேந்த விழித்தான் ரவீந்திரன். "அவசியம் இல்லையே?"

சற்றுத் தினறிவிட்டு, "அதெப்படி? மூன்று நாட் கள் அந்தக் கட்டைத் தடியன் வீட்டில் இருந்து விட்டு வந்திருக்கிறாய். ஒரு வேளை, அவன் அங்கே உன் னைக் கற்பழித்திருந்தால் அதற்கு மேல் உன்னை மணக்க நான் எச்சில் இலை நாய் அல்ல!" என்று தன் பெருமை பேசினான் அவன்.

சற்று நேரம் பேசாமல் இருந்துவிட்டு, "அப்படி எதுவும் நடக்கவில்லை என்று நான் சொன்னால் அதை நீங்கள் நம்பமாட்டீர்களா, ரவீந்திரன்?" என்று அவன் கண்களை நேராகப் பார்த்துக் கேட்டாள் சௌதாமினி.

"அது அது வந்து, நான் உன்னை நம்புவேன் மினி. ஆனால் பின்னால் ஏதும் தகராறு ஆகிவிடக்கூ டாது பார்..."

"அதாவது, என் வார்த்தையை மட்டுமாக நீங் கள் நம்பத் தயாரில்லை. அதை மெய்யென்று ஏற்க ஒரு ருசு வேண்டும் என்கிறீர்கள். அப்படித்தானே?"

அவளே விளக்கிவிட்ட நிம்மதியில் அவன் வேக மாகத் தலையாட்டினான்.

"யோசித்துச் சொல்லுங்கள் ரவீந்திரன். திரும ணம் என்றால் ஒருவருக்கொருவர் பரஸ்பர நம் பிக்கை, மரியாதை, மதிப்பு எல்லாம் இருக்க வேண் டாமா? என் வார்த்தையை நம்பாமல் இந்த 'டெஸ்ட்' எடுக்கச் சொல்வது என்னை இழிவு படுத்துவது ஆகாதா?" என்று வெகு நிதானத்துடன் வினவினாள் சௌதாமினி.

ஆனால் அந்த நிதானத்தின் நன்மையைப் புரிந்து கொள்ளாமல், "அதெப்படி உன் வார்த்தையை மட் டும் நம்பிச் சும்மா இருக்க முடியும் மினி. இது என் வாழ்க்கை முழுவதையும் பாதிக்கக் கூடிய விஷயம். இதில் ஒரு ருசு இல்லாமல் உன் வார்த்தையை மட்டும் நம்பி இறங்க நான் என்ன முட்டாளா?" என்று அடித்துக் கேட்டான் அவன். அதோடு நில்லாமல், "ஆனாப் பட்ட ராமனே, அந்தக் கற்புக்கரசி சீதை யைத் தீக்குளித்துத் தன் கற்பை நிரூபிக்கச் செய்தான். ஆனால் ஒன்று, சீதை உன்போல இல்லை. உயிரையே குடிக்கக் கூடியது என்று தெரிந்தும் தயங்காமல் தீக்கு ளித்துத் தன் கற்பை நிலைநாட்டினாள்" என்றான் குற்றம் சாட்டும் குரலில்.

சரேல் என்று நிமிர்ந்தாள் சௌதாமினி. "ஆனா னப்பட்ட ராமனா? ஆமாம் இதற்கு மட்டும் ராமனை உதாரணம் காட்ட ஓடிவந்து விடுவீர்களே! ராமரிடம் நீங்கள் வேறு எதையாவது படித்தது உண்டா? உயிரை துச்சமாக மதித்து, கடல் தாண்டிச் சென்று, சீதையைக் காப்பாற்றினாரே? நீங்கள் என்ன செய்தீர்கள்? நானாக வந்து சேரும்வரை இல்லாத பொய்யெல்லாம் சொல்லி விட்டு மூக்குப் பிடிக்க மொக்கியதோடு சரி!

"ராமனாம் சீதையாம் ராமர் இப்படித்தான், சீதையை ஒட்டல் ரூமுக்கும் பொட்டல் காட்டுக்கும் அழைத்துச் சென்று துச்சாதனன் வேலை செய்ய முயன்றாரா?

"என்னிப் பாருங்கள், அந்தச் சமயங்களில் நான் உங்களுக்கு இணங்கியிருந்தால் இந்த வாழ்வு விட்டு டென்டை யாருக்கு செய்து என்ன கண்டுபிடிப்பீர்கள்?

"ஏன்? திருமணம் ஆனபிறகு இதுபோல நிகழ்ந்தால் அப்போது என்ன பரிசோதனையில் என்னை நிரூபிக்கச் சொல்லுவீர்கள்? என்னவோ சொன்னீர்களே, ஆனானப்பட்ட ராமன் என்று! அந்த ராமர் சீதையிடம் கேட்டது போலத் தீக்குளிக்கவும் சொல்லுவீர்களோ!" என்று படபடவென்று பொரிந்து கொட்டினாள் அவள்.

அவளது கேள்விகளுக்குப் பதில் சொல்ல முடியாமல் சற்றுநேரம் மலங்க விழித்த ரவீந்திரன், குரலை உயர்த்தினான். "இதெல்லாம் என்ன அர்த்தமில்லாத பேச்சு? நீ இப்போது வைத்தியப் பரிசோதனைக்கு வரப் போகிறாயா, இல்லையா?" என்று அதட்டிக் கேட்டான்.

தலையை நிமிர்த்தி அவனை ஒரு பார்வை பார்த்தாள் சௌதாமினி. "தாராளமாய் வருகிறேன். ஆனால் ஒரு சந்தேகம்!"

"எ..என்னது?"

"இந்த டெஸ்ட் எந்த அளவுக்குப் போதுமானது என்று நீலகாந்தனும் நானும் அங்கே, கட்டிப்பிடித்து, முத்தமிட்டது எல்லாம் இதில் கண்டு பிடிக்க முடியாதே. அதெல்லாம் சும்மா பரவாயில்லையா?"

"நெருப்பை அள்ளிக் கொட்டினாற்போல என்ன பேச்க பேகிறாள் பாருங்கள்" என்றாள் சாரதா.

நாயின் பக்கம் திரும்பித் தீயெழ விழித்தாள் சௌதாமினி. "நெருப்பா? நானா? ஆமாம் அம்மா, நன்மதி பூர்ணிமா என்ற உங்களுக்குப் பெயர் வைத்திருக்க வேண்டும். உன்னைப் பார்க்கும் போதே பயமாயிருக்கிறது போல மனம் குளிர்ந்து போகிறது என்ற அப்பா சொல்வதுண்டு. இப்போது நிலைமை நீங்களே நெருப்பாக்கி விட்டீர்கள். கண் எரிய வைக்கும் கனலாக்கி விட்டீர்கள்.

"இதோ, நீங்கள் நேற்றெடுத்த மாப்பிள்ளை, இவர் எத்தனைமுறை என்னிடம் அந்தமீற முயன்றார் தெரியுமா? சம்மதித்தேனா? அவரிடமே கேளுங்கள்? என் மேல் அளவு மீறிய ஆசை என்று பெருமிதப்பட்டபோதும் கூட நான் நிலை தவறவே இல்லையே!

"ஒட்டலில் ரூம் போட்டு, உள்ளேவாடி என்று இழுத்தார் இவர். இந்த மனிதரிடமிருந்து இரு முறை என்னைக் காத்தவர் நீலகாந்தன். நீலகாந்தன்.

இரண்டாவது தடவை மிகவும் மோசமான நிலை மீறியிருந்து "அப்படிக் காப்பாற்றிய போதுதான் இவரை மணக்க வேண்டாம் என்றார். அப்போது அவரை நான் எடுத்தெறிந்து பேசினேன். உன்னிடம் நம்பிக்கையோ, மரியாதையோ இல்லாதவனை மணக்காதே என்றார். இவர் மட்டுமல்ல, என்னை அறிந்த அத்தனை பேருக்கும் எங்கள் வீட்டு வேலைக்காரி உட்பட எல்லோருக்கும் என்மேல் நம்பிக்கை, மதிப்பு, மரியாதை எல்லாம் உண்டு என்றேன். அதுவே சவாலாயிற்று.

"தோற்கக்கூடும் என்ற எண்ணமே இல்லாததால் அவர் சொன்ன நிபந்தனையை ஏற்றேன், அம்மா. ஆனால் பயங்கரமாய்த் தோற்றுப் போனேனே!

"உங்களில் ஒருவருக்குக் கூட என் மேல் நம்பிக்கை இல்லாமல் போயிற்றே!

"ஆனால் ஒன்று, எனக்கு என்னிடம் நம்பிக்கை யும், மதிப்பும், மரியாதையும் கூட இருக்கின்றன அம்மா, அதனாலேயே, தோற்றுவிட்ட நான், ஏற்றுக் கொண்ட நிபந்தனையை நிறைவேற்றப் போகிறேன்."

"என்ன நிபந்தனை?" என்று வினவினார் சிவ குரு.

"அவரிடமே திரும்பி வந்து விடுவதாக" என்று கைப்பையை எடுத்துக் கொண்டு எழுந்தாள் சௌதா மினி.

"இல்லை கண்ணம்மா, போகாதே, நான் உன்னை நம்புகிறேனம்மா." என்று கதறினார் சிவகுரு.

அவரை நிமிர்ந்தும் பாராமல், "காலம் கடந்து விட்டது, அப்பா" என்று திரும்பி வாயிலை நோக்கி நடந்தாள் அவள்.

"அவள் அவனிடம் போகிறாள் என்பதிலேயே அங்கே என்ன நடந்திருக்கும் என்பது தெரியவில் லையா?" என்றான் ரவீந்திரன்.

திரும்பி அவனை ஒருதரம் வெறித்துவிட்டு, வீட் டுப் படியிறங்கி நடந்தாள் அவள்.

"அய்யோ! அப்புறம் என்ன பேச்சுவரும்?" என்று ஓடிவந்த தாயையோ "வேண்டாம் கண்ணு" என்று வந்த தந்தையையோ கவனியாதவள் போல, அருகே காலியாக வந்த ஆட்டோ ஒன்றை நிறுத்தி, அதில் ஏறி அமர்ந்து மேலே ஓட்டச் சொன்னாள் சௌதாமினி.

ஓட்டல் வரவேற்பில் விசாரித்தபோது, நீலகாந் தன் அறைக்கு வந்து விட்டதாகச் சொன்னார்கள்.

மாலை தாண்டி இருள் கவியத் தொடங்கிய அந்த நேரத்தில் தனியாக அவள் நீலகாந்தனைத் தேடிச் செல்வதைச் சற்று விசித்திரமாக அந்த 'ரிசப்ஷனிஸ்ட்'

நோக்கியதைச் சௌதாமினி கொஞ்சமும் கவனிக்க வில்லை.

அதை மட்டுமல்ல, சுற்றி நடக்கும் எதையும் அவள் உணர்ந்தாளில்லை எனவே எல்லா உணர்வு களும் மந்தித்து விட்டாற்போல, சாவி கொடுக்கப்பட்ட ஓர் இயந்திரம் போல இயங்கி, நீலகாந்தனின் அறை யைச் சென்றடைந்தாள்.

கதவைத் தட்டி, அவனது அனுமதியின் பேரில் உள்ளே சென்று, "வந்துவிட்டேன்" என்றாள் உணர்ச் சியற்ற குரலில்.

நீலகாந்தனும் அவளை அவ்வளவு சீக்கிரமாக அவள் அன்றே திரும்பி வரக்கூடும் என்று கொஞ்ச மும் எதிர்பார்க்கவில்லை. யாரோ 'ரூம் சர்வீஸ்' என்று வரச் சொன்னவன்.. அவளைக் கண்டதும் ஆச்சரியப் பட்டுப் போனான். "சௌதாமினி!" என்று வியப்பும் மகிழ்ச்சியுமாகத் தன்னை மீறிக் கூவியவன், சட்டென அடங்கினான்.

அவளையே பார்த்தபடி அவள் அருகே வந்து, "இந்த வருகைக்கு முன் நீ என்ன வேதனை பட்டிருப் பாய் என்று என்னால் ஊகிக்க முடிகிறது.

"சௌதாமினி, அத்தனைக்கும் ஈடு செய்யும் விதமாய், அதுவே லட்சியமாய் இனிவரும் காலம் முழுமையும் நான் நடப்பேன் என்றால் நம்புகி றாயா?" என்றான் மிருதுவான குரலில்.

'நம்புகிறேன்' என்றது சௌதாமினியின் வெற் றுக் குரல்.

"சது, உனக்கு அது பிடிக்கவில்லை என்றால் தயங்காமல் கம்மா சொல்லிவிடு. உன்வீட்டார் அத் தனை பேரிடமும் வந்து உண்மையைச் சொல்வதோடு அதை நிரூபித்தும் விடுகிறேன்" என்றான் நீலகாந்தன் குரலில் கொஞ்சம் அழுத்தத்துடன்.

எப்படி முடியும்? தலையசைத்து நயமாய் நோக கினாள் சௌதாமினி.

"நிஜம். சௌதாமினி. நான பண்மை வீட்டுப் பக்கம் வரவே இல்லை என்பதற்கும், இங்கேயேதான் இருந்தேன் என்பதற்கும் ரூம் இருக்கிறது. ஒவ்வொரு வேலை நேரத்துக்கும் தூங்குகிற நேரத்துக்கும் கூடச் சான்று வைத்திருக்கிறேன் சது."

நீலகாந்தன் பேசப்பேச, சௌதாமினியின் முகத் திலிருந்த மரத்த தோற்றம் மெல்ல மெல்ல மாறி, வியப்பு பரவியது "ஏன்?" என்றாள் சற்று சிரமத்துட னேயே.

அவள் கண்மேல் விழுந்த கூந்தலை மென்மை யாய் விலக்கி விட்டான் நீலகாந்தன். "சது, நாம் சந்தித்த நேரங்கள் எல்லாம் ஒரு மாதிரிப் பட்டவை. இருமுறை பார்த்தேன் என்றாலும் எதிராளி உன்னை மணக்கப் போகிறவன் என்பது எனக்குப் பாதகமா கவே இருந்தது. அதோடு உன்னை பலவந்தமாக என் இடத்துக்கும் கொண்டு சென்றது... அப்புறம் அந்தச் சவால்... எதுவுமே உனக்கு என்மேல் அன்பை ஏற்ப டுத்தக் கூடியது அல்ல. அதனால், ஒரேயடியாக வெறுப்பாக இருந்தால், உன் வாழ்வு நல்லபடியாக நடக்கச் செய்ய ஒரு வழி வேண்டும் என்று நினைத் தேன்... அதற்கு ஆனவற்றைச் செய்யவும் செய்தேன். என்னைப் பொறுத்தவரையில் எனக்கு உன் மகிழ்ச்சி தான் முக்கியம்... நம்புகிறாயல்லவா?"

அவளது நன்மைக்காக யோசித்து, அவளது மகிழ்ச்சிக்காகச் செயல் படுகிறவன்!

முகம் பூவாய் மலர, "நம்புகிறேன்" என்று கூறி, அவன் கையைப் பற்றி முத்தமிட்டாள் சௌதாமினி.